விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 07 வெள்ளிக்கிழமை (23.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 004

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்க முடியாது

# கூட்டமைப்புடன் பேசுவதில் எவ்வித பயனும் இல்லை!

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எவ்வித பயனும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவதாகவும் அத்தகைய அதிகாரங்களை வழ்ங்க அரசாங்கம் ஒரு போதும் இணக்கம் தெரிவிக்காது எனவும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழக சூழலில் படையினர் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விடுதியை இராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர். பல்கலைக் கழகத்தின் பாலசிங்கம் ஆண்கள் விடுதியின் இருமருங்கிலும் தரித்து நின்று வீதியால் செல்பவர்களை இராணுவத்தினர் சோதனை செய்தனர்.

இச் சம்பவம் நேற்று மாலை ஏழு மணியிலிருந்து இடம்பெற்றுள்ளது. வழமைக்கு மாறாக இராணுவத்தினர் ரோந்தின் பொழுது விடுதியின் சூழலில் தரித்து நின்று சோதனையில் ஈடுபட்டனர். இதன் பொழுது மாணவர்களும் வீதியால் சென்ற மக்களும் தடுத்து சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். (பா)

## படையினருக்கு உரிய மரியாதை வழங்கப்படும்-அரசு

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் முடிந்த பின்னர் இராணுவத்தில் மேஜர் தரத்திலிருந்து இராணுவ வீரர்வரை ஒருவரையும் சேவையிலிருந்து நிறுத்தவில்லை. ஒரு போதும் அவ்வாறு செய்யமாட்டோம். நாட்டை மீட்பதற்கு அவர்களின் பங்களிப்பை பெற்றதைப்போன்று பொருளாதார மீட்புக்காகவும் இராணுவத்தினரின் ஒத்துழைப்பைப் பெறுவோம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஆண்டில் சாத்வீக போராட்டங்கள் நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை

### மனோகணேசன் அறிக்கை

(கொழும்பு)

பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லை. இராணுவ முகாம்கள் வாபஸ் இல்லை என்ற ஜனாதிபதியின் அறிவிப்புக்கள்புதிய ஆண்டில் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையை தகர்த்து விட்டுள்ளன என ஜனநாயக மக்கள் முன்னணித்தலைவர்மனோகணேசன்தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின்புதியநிலைப்பாடுகள் தொடர்பில் மனோ கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது,

புலிகளை அழித்து, போரை முடித்து வைத்து விட்டு சமாதானத்தை வாங்கித் தருகிறோம் என இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்திய, அமெரிக்க, ஐரோப்பிய அரசாங்கங்கள் காப்புறுதி சான்றிதழ்கள் வழங்கியிருந்தன.

இன்று எல்லோரும் கூட்டுச் சேர்ந்து எம்மை ஏமாற்றி விட்டார்கள் என்ற அதிர்ச்சியுடன் தமிழ் மக்கள் புதிய (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தில் இந்தியா உரத்துக் குரல் எழுப்ப வேண்டும்

### அமெரிக்க ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் தற்போது கடைப்பிடிக்கும் மென்போக்கை கைவிட்டு இந் தியா உரத்துக்குரல்எழுப்பவேண்டும்என அமெரிக்க ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை வெளியிட்டால், ஆசியாவின் ஏனைய சிறிய நாடுகள் மற்றும் ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகள் போன்றனவும் அவ்வழியைப் பின்பற்றும் என இவ்வூடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் கோல்டன் போஸ்ட் ஊடகம் இவ்வாறு தெரிவித்துள்ளது. இச் செய்திக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அர (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவுங்கள்

## சர்வதேசத்திற்கு சீனா அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்த சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சீனா தெரிவித்துள்ளது. இலங்கையில் ஸ்திரமான அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய பின்னணியை சர்வதேச சமூகம் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும் சீனா குறிப்பிட்டுள்ளது.

சீனவெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லியூ மெயின் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கை (19ஆம் பக்கம் பார்க்க)

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத தீர்வு தேவையில்லை

### அரசுக்கு கூட்டமைப்பு பதில்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாமல் அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைக்க விரும்புமானால், அத்தகையதொரு தீர்வு தமிழ் மக்களுக்கு தேவையில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி பயனில்லை எனவும் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமானகெஹலியரம்புக்வெல்லதெரிவித்திருந்தார்.

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்லவின் இந்த அறிவிப்பு குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது எனின் பேச்சுவார்த்தைகளை நடத்துவது பயனளிக்காது. (19ஆம் பக்கம் பார்க்க)

## பொறுப்புக் கூறும் விடயத்தை ஆணைக்குழு உதாசீனம் செய்துள்ளது

### பிரி.நாடாளுமன்றக் குழு சாடல்

(கொழும்பு)

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப்போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்த பொறுப்புக் கூறலில் இருந்து உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு தவறியுள்ளதாக தமிழர்களுக்கான பிரித்தானியாவின் அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன், சர்வதேச விசாரணைப் பொறி முறையை ஏற்படுத்துவதற்குரிய கடப்பாட்டினை (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி அமெரிக்காவிற்கான மகஜர் தயார்

### அனோமா தெரிவிப்பு

(கொழும்பு)

தனது கணவரை விடுதலை செய்வது தொடர்பாக, சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துக்கு தேவையானஅளவு கையொப்பங்கள் திரட்டப்பட்டுள்ளதாக முன்னாள் இராணுவத் தளபதிசரத்பொன்சேகாவின்மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதன்படி சரத் பொன்சேகாவை விடு தலை செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட மகஜரில் 25 ஆயிரம் கையொப்பங்கள் ஏற்கெனவே திரட்டப்பட்டுள்ளதாகவும் இன்னும் புலர் மகஜரில் கையொப்பம் இட்டு வருவதாகவும் அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சரத் (19ஆம் பக்கம் பார்க்க)

# தெல்லிப்பளை வைத்தியசாலை சொந்த இடத்தில் மீள் ஆரம்பம்

## முதலாம் திகதி முதல் முழுமையான சேவைகள்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை எதிர்வரும் முதலாம் திகதி முதல் அதன் சொந்தக் கட்டிடத் தொகுதியில் சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாகத் தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோயிலுக்கு முன் தற்காலிகமாக இயங்கி வந்தது.

இந்நிலையில் அதியுயர் பாதுகாப்பு வலயம் தளர்த்தப்பட்ட பின்னர் குறித்த வைத்தியசாலை எதிர்வரும் முதலாம் திகதி முதல் தனது சொந்த இடத்தில் முழுமையாக இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (பா-11)

## யாழ்.மாநகர சபை உறுப்பினர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை உறுப்பினரான மனுவல் மங்களநேசன் இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியின் ஊடாக நேற்று பி.ப. 2.00 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது மூன்று மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தன்னை கீழே தள்ளி விழுத்தியதாக யாழ். மாநகர சபை உறுப்பினர் மங்களநேசன் தெரிவித்துள்ளார். (பா-6)


### பந்தல் விற்பனைக்கு

சோடனைப் பந்தல், பூமண வறை, முத்து மணவறை, பிளாஸ்ரிக் கதிரை என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகட்கு:- S. ஜெயம்
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு.
TP:- 077 6332624

(7006)


## நல்லூர் கல்வி கோட்ட அதிபர்களுக்கான அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான 2012-ம் ஆண்டிற்கான கல்வித் திட்டமிடல் கூட்டம் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தில் இடம்பெறும் என நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா அறிவித்துள்ளார். (பா-6)

## கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் நடத்தப்படும் ஜே/81 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஜே/81 கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே இக் கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா கேட்டுள்ளார். (பர)







ஸ்ரீராமஜெயம்

### அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்



மருதனார்மடம், இணுவில், சுன்னாகம்.

### இலட்சார்ச்சனைப் பெருவிழா

வற்றாத செல்வமும் வளம்மிகு சோலைகளும் வானுயர் மலைகளும் பாய்ந்தோடும் நதிகளும் பக்தி நெறிவழுவா மக்களும் நிறைந்த ஞான பூமியான ஈழமணித் திருநாட்டின் சிரசு போல் விளங்கும் யாழ்ப்பாணத்தில் கமத்தில் நிறைந்த மருதனார்மடத்தினில் மந்திர ஒலியும், மணிநாதமும், பஜனைஇசையும் நாளும் கலந்த சுந்தர ஆஞ்சநேயர் திருக்கோயிலில் நிகழும் மங்களம் மிகு கர வருஷம் கார்த்திகை மாதம் 31ம் நாள் 13.12.2011 செவ்வாய்க்கிழமை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி 23.12.2011 வெள்ளிக் கிழமை வரை இலட்சார்ச்சனை நடைபெற்று மறு நாள் தேர்த்திருவிழாவும் 25.12.2011 ஞாயிற்றுக்கிழமை 108 கலச அபிஷேகமும் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. அடியார்கள் அபிஷேக, பூஜை, அன்னதான பொருட்களினை உபகரித்து அனுமனின் அருளினைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

24.12.2011 சனிக்கிழமை தேர்த்திருவிழா

| | | |
|---|---|---|
| காலை | 6.30 மணி அபிஷேகம் | |
| | 7.30 வசந்த மண்டப பூஜை | |
| | 9.00 மணி தேர்ப் பவனி | |
| மாலை | 4.00 மணி பிராயச்சித்த அபிஷேகம் | |
| | 5.00 மணி பஞ்சமுக அர்ச்சனை | |

25.12.2011 ஞாயிற்றுக்கிழமை (ஹனுமத் ஜெயந்தி தினம்)

| | | |
|---|---|---|
| காலை | 8.00 | 108 கலச அபிஷேகம் |
| | 11.00 | மணி சிறப்பு சொற்பொழிவு |
| | 12.00 | சந்தன அலங்கார பூஜை |

(கூட்டுப் பொங்கல் காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்)

அனைவரும் வருக அனுமன் அருள் பெறுக.

இங்ஙனம்
சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் (ஆதீனகர்த்தா)

(7011)



### இலங்கைத் திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவுப் பரீட்சை -2012

கடந்த 6 வருடங்களில் கணிசமான மாணவர்களை சித்தியடையச் செய்த சட்டத்தரணியுடன் யாழ் இந்துவின் மைந்தன் கலந்து கொள்ளும்

### மாபெரும் வழிகாட்டிக் கருத்தரங்கு

இடம் : யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி [குமாரசுவாமி மண்டபம்]

காலம் : 24.12.2011 [சனிக்கிழமை]
காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை

நுழைவுக் கட்டணம் : 600/-

(7012)


# மரண அறிவித்தல்

## வைத்தியகலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன்

(சமாதான நீதவான்)



(சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்.மாநகர சபை)

ஆவே மரியா 72, கோயில் வீதி, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியகலாநிதி ம.மரியதாசன் அவர்கள் 22.12.2011 நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இன்னாசிமுத்து மரிசலீன்பிள்ளை -ஜெயசீலியம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மு.கந்தையா - பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும்,

லிமா லோகேஸ்வரியின் அன்புக் கணவரும்,

ம.யேசுதாசன், திருமதி மேரி ராஜேஸ்வரி நவரட்ணம், காலஞ்சென்ற பாக்கியநாதர் எலிசபெத் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

Dr.ம.ஜெரால்ட் ஜீவதாசன் (யாழ்.போதனா வைத்தியசாலை), Dr. எம்.ஜெறோம் லோகதாசன் (Med -1, Emergency Services-இரத்மலானை), திருமதி ஜெம்மா தேவகி றொகான் (இராமநாதன் இந்து மகளிர் தேசிய கல்லூரி, கொழும்பு -4), செல்வி ம.ஜெனிபர் ஜானகி (செலான் வங்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

Dr.அ.றொகான் (தேசிய புற்றுநோய் வைத்தியசாலை-மகரகம), Dr. அறிவழகி (யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி ஆன் ஸ்டரீனா(விவசாயத் திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

திருமதி விசாகபூஷணி முருகையா, விசாகரத்தினம், சரவணபவன், திருமதி கோமதி செல்வநாதன், சயலொளிபவன், திருமதி அல்போன்ஸ், திருமதி குகபூசணி இராமலிங்கம், திருமதி ஸ்கந்தமலர் குகதாசன், திருமதி சோமசுந்தரம், திருமதி சிவபாதம் ஆகியோரின் மைத்துனரும்,

றொகான் நேசன், யோவான் அருணன், ஆன்குறிஸ்டா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இரங்கல் கூட்டத்தின்பின், சுண்டுக்குளி புனித யோவான் (சஞ்சுவான்) ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவே மரியா
72, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
0212223363

தகவல்:
குடும்பத்தினர்

(7013)

# இன்று ஒரு தகவல்

## அறிவும் ஞானமும்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவருக்கு ஒரு பிள்ளை. அந்தப் பிள்ளைக்கு விபரமே தெரியாது.

அவன் ஒரு முட்டாள் என்பது மக்களுக்குத் தெரியும்.

ஆனாலும் அவன்தான் அடுத்தபடியாக ஆட்சிக்கு வரவேண்டியவன்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டியவன். இப்படி இருந்தால், என்ன செய்வது என்பது எல்லோருடைய கவலையாகும்.

மன்னர் அமைச்சரவையைக் கூட்டினார். ஆலோசனை கேட்டார்.

"இவனை இன்னொரு நாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி நிறையப் படிக்க வைத்து நல்ல ஞானத்தோடு திரும்பி வரட்டும். அதன்பின் பார்த்துக் கொள்ளலாம்!" அப்படியென்று அமைச்சரவை முடிவு எடுத்தது.

மன்னருக்கும் அது சரியென்று தென்பட்டது.மகனை வெளித் தேசத்திற்கு அனுப்பி வைத்தார்.

இவனும் போனான். ஒரு பல்கலைக்கழகத்திலே சேர்ந்தான். அதிகம் படித்தான். அதன் பின்னர் தந்தைக்கு ஒரு கடிதம் எழுதினான்.

அதில் "தந்தையே! நான் படிப்பை முடித்து விட்டேன். இனிமேல் நாடு திரும்பலாமென்று நினைக்கிறேன்" என்று எழுதப்பட்டிருந்தது.

இதை வாசித்த மன்னருக்கு மிகவும் மகிழ்ச்சி. மகன் படித்து விட்டான் என்பது ஆனந்தம். உடனே மகன் திரும்பி வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார்.

இளவரசன் நாடு திரும்பினான். இதைக் கொண்டாடுவதற்கு அரண்மனையில் ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்திருந்தார்கள். முக்கியமானவர்கள் எல்லோரும் அதில் கலந்து கொள்வதற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். விருந்தில் கலந்து கொள்ள முனிவர் ஒருவரும் வந்திருந்தார்.

முனிவர் இளவரசனருகில் போய் உட்கார்ந்து "என்னப்பா.... எப்படி படித்திருக்கிறாய்? என்று வினவினார்.

"நிறையப் படித்துவிட்டு வந்திருக்கிறேன்" என்றுஇளவரசன் கூறினான்.

"அப்படி என்ன நிறையப் படித்தாய்?" என்று கேட்டார்.

அனைத்தையும் விபரமாகச் சொன்னான்.

அவன் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும் போதே.... முனிவர் தன் மோதிரத்தை கழற்றி உள்ளங்கையிலே வைத்து மூடினார். அப்படியே கையை நீட்டி அவன் முன்னால் காட்டி "இதற்குள் என்ன இருக்கிறது என்று சொல் பார்க்கலாம்" என்றார்.

இளவரசன் ஒரு கணம் யோசித்துவிட்டு "உங்கள் கைக்குள்ளே இருக்கிறது வட்டமான பொருள். அதன் நடுவிலே துளை இருக்கும்" என்று சொன்னான்.

முனிவர் திகைத்து போய் விட்டார்.

"பையன் பெரிய அறிவாளியாக மாறிவிட்டான். வட்டமான பொருள் நடுவிலே துளையிருக்கும் என்பதை சொல்லிவிட்டாய். அதன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

இளவரசன் சிறிது நேரம் யோசித்தான். அதன்பின் சொன்னான்; "முனிவரே! நான் படித்த விஞ்ஞானம் உங்களுக்குப் பதில் சொல்ல உதவவில்லை! இருந்தாலும் பதிலளிக்கிறேன். அது ஒரு வண்டிச் சக்கரம்...!" என்றான்.

இப்போதுதான் முனிவர் "முட்டாளை யும் படிக்க வைக்கலாம்... ஆனால், சிந்திக்க வைக்க முடியாது" என்பதை விளங்கிக் கொண்டார்.

"தகவல் அறிவு ஞானமாகாது!" என்கிறார் ஓஷோ. ஏனென்றால் தகவல்கள் மாறுதலை ஏற்படுத்துவதில்லை. ஆனால், ஞானம் என்பது மாறுதலால் உண்டாகக்கூடிய ஒன்றாகும்.

மனம் ஒருநிலைப்பட வேண்டும். அதன்பின்புதான் படிக்கும் கல்வி உண்மையானதாக இருக்கும்.

மனம் ஒரு நிலைப்பட என்ன வழி?

"மனிதன் முழுமையாக மாறுவதற்கு வழிமுறை தியானம் தான்" என்றார்.

அதனால் அதிகம் படித்தவன் எல்லோரும் ஞானம் உள்ளவன் என்று நினைக்கக் கூடாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஊடகங்கள் உண்மைகளை திரிபுபடுத்தி கூறுகின்றன

## யாழ்.மாநகர முதல்வர் ஊடகங்கள் மீது பாய்ச்சல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரும் பத்திரிகைகளும் யாழ்ப்பாணக் கலாசாரம் சீரழிந்து செல்கின்றது என பொய்ப்பிரசாரம் மேற்கொண்டு வருவதாக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட விடுதி உரிமையாளர்களுடனான சந்திப்பு நேற்று காலை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில், யாழ்ப்பாணக் கலாசாரம் சிறந்து விளங்குகின்றது என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் இதனை சிலர் குழப்புவதற்கு முயற்சிக்கின்றனர்.

கலாசார சீரழிவுகள் நடப்பது என்பது சிலவேளை உண்மையாக இருக்கலாம். ஆனால், சிறு விடயங்களை பெரிதுபடுத்திக்காட்டாது அவற்றை திருத்திக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மிக அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் உள்ள சில விடுதிகளில் கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதாக பத்திரிகைகள், இணையங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

ஒரு சிறு விடயத்தை கூட விஸ்வரூபமாக்கி செய்தி வெளியிடுகின்றனர். தென்பகுதியில் நடைபெறுவது இங்கே நடைபெறுகின்றது என்று ஒப்பிட்டு கூறுகின்றார்கள். முதலில் மிகைப்படுத்திக் கூறுவதனை ஊடகங்கள் நிறுத்த வேண்டும்.

இ ணை ய ங் க ள் , தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் என அனைத்தும் திரிபுபடுத்தியே செய்திகளை வெளியிடுகின்றன.

விடுதிகளில் கலாசார சீரழிவுகள் இடம்பெறுவது என்பது விடுதி உரிமையாளர்களுக்கு மட்டுமே உண்மைநிலை புரியும் என்பதனால் அவர்களால்தான் இதன் உண்மைத்தன்மையை முன்வைக்க முடியும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற நோக்கில் மாநகர சபை இதுவரை காலமும் சட்டங்களை எமது மக்களுக்காக தளர்த்தி வந்துள்ளது. இனிவரும் காலங்களில் இவ்வாறான சலுகைகள் வழங்கப்படமாட்டாது. அனைத்து விடுதிகளும் சட்ட வரம்பிற்குள்ளேயே இயங்க முடியும்.

பத்திரிகைகள், இணையங்களில் வெளிவரும் தகவல்களை உண்மையானவையா என உறுதிப்படுத்தி ஆராய்ந்து பொது மக்களுக்கு எவ்வாறு செய்திகளை வெளியிடல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் காலை 8.30மணிக்கு மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு ஒரு பாடசாலையில் இருந்து இரண்டு ஆசிரியர் வீதம் கலந்து கொள்ளுமாறு துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் கு.விஜயபாலா அறிவித்துள்ளார். (அ-3-15)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80-120 | 70 |
| பச்சைமிளகாய் | 220 | 200 | 280 |
| தக்காளி | 130 | 190 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 80 | 100 | 90 |
| கரட் | 80 | 120 | 90 |
| பூசணி | 65 | 70 | 60 |
| புடோல் | 50 | 80 | 70 |
| வாழைக்காய் | 40-45 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 70 |
| பாகற்காய் | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 60 | 60 |
| பயற்றங்காய் | 140 | 160 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 60 |
| பீற்றூட் | -- | 120 | 140 |
| கறிமிளகாய் | 140 | 300 | 160 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 40 | 20 |
| தேசிக்காய் | 80 | 150 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 25 | 25 |

## இராசி பலன்

23.12.2011

(மார்கழி 7, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

சதுர்தசி பின்னிரவு 1.49 மணிவரை

அனுஷம் முற்பகல் 10.52 மணிவரை

இராகுகாலம் 10.55-12.25 மணிவரை

சுபநேரம் 6.25-7.55 மணிவரை

**மேடம்** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, விரயங்கள் கூடும், மற்றவர்களுக்காகப் பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது,போசன சுகமுண்டு.

**இடபம்** பெண்களால் பெருமை வந்து சேரலாம், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள்,பிரிந்தவர் இணையும் வாய்ப்புண்டு, வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரலாம்.

**மிதுனம்** உற்சாகமாகப் பணிபுரியும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வருமானத்தை அதிகரிக்கும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உடல் நலனில் புத்துணர்வு ஏற்படும்.

**கடகம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், சொல்லை செயலாக்கி காட்ட முனைவீர்கள், தொழிலில் புதிய முதலீடுகளை செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், புதிய வாகனங்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்,இனிய செய்திகள் வந்து சேரலாம், சுப செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி** நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், சந்தேகப்பட்ட காரியமொன்று நல்லபடியாக நடைபெறலாம்,உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும்.

**துலாம்** புதிய பாதை புலப்படும் நாள்,பொது வாழ்வில் புகழ் கூடும்,தொலைபேசி வழித்தகவலால் தொழில் வளர்ச்சி அதிகரிக்கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் நாள், உறவினர் பகை அகலும், அனுகூலமான செய்தியொன்று வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**தனுசு** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப செலவுகள் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கலாம்.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்,பணப்புழக்கம் அதிகரிக்கும், உத்தியோக உயர்வுண்டு, ஆரோக்கியமான நாள்,குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையும்.

**கும்பம்** செய்தொழிலை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்,அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர்,காரிய அனுகூலமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மீனம்** மனக்குழப்பம் அகன்று மகிழ்ச்சி கூடும் நாள்,மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும்.

வளவன்

# ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட்டு மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர வேண்டும்

## யாழ்.அரச அதிபர் கோரிக்கை

ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட்டு சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள பிரச்சினைகளை வெளிக்கொண்டுவந்து சமூகத்தினை வழி நடத்த வேண்டும் என யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

பெண்கள் வன்முறை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு யாழ். மாவட்ட செயலகமும் பால்நிலை வன்முறைக்கெதிரான செயற்பாட்டுக்குழுவும் யு.என்.எச்.சி.ஆரும் இணைந்து தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு நிகழ்வில்பிரதமஅதிதியாககலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்திஜீவிகளும் சமூக நிறுவனங்களும் சமூகத்தின் அடி மட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து தீர்ப்பதற்கான திட்டங்களை முன்வைப்பதன் ஊடாகவே அதிகரித்துள்ள பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தி தீர்க்க முடியும்.

யாழ். மாவட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளது. தினமும் என்னிடம் வந்து பல பெண்கள் முறையிடுகின்றனர். குடும்ப வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான முறைகேடுகள் உள்ளிட்ட பல துன்புறுத்தல்களுக்குப் பெண்கள் உட்படுத்தப்படுகின்றனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண்கள் முதலில் என்னிடம் முறையிடுவதால் சில பொலிஸ் அதிகாரிகள் அந்தப் பிரச்சினை தொடர்பான முறைப்பாடுகளை ஏற்க மறுப்பதாக மீண்டும் என்னிடம் அதே பெண்கள் முறையிடுகின்றனர்.

பெற்றோர்களின் கண்டிப்பின்மை, வறுமை, பாதுகாப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களால் பெண்கள் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படுகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்த பெற்றோர்கள் மற்றும் கணவனை இழந்த தனிமைப்படுத்தப்பட்ட பெண்களுக்கு துணிவினை ஏற்படுத்தி தன்னம்பிக்கையினை வளர்த்து பொருளாதார ரீதியாக மேம்பாடடையச் செய்யக்கூடிய செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

மேலும் சட்டத்தின் ஊடாக குற்றவாளிகளை இனங்கண்டு கடுமையான தண்டனை வழங்குவதன் ஊடாகவும் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்குவதன் ஊடாகவும் சமூகத்தின் அடிமட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்துவதன் ஊடாகவும் கூட இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.

எமது மாவட்டத்தில் பெண்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இதனை ஊடகங்கள் பொறுப்புடன் வெளிக்கொண்டு வந்து சமூகத்தினை வழிநடத்தி பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க முன்வரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள மருத்துவநிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவயோகன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் செல்வி கோசலை மனோகரன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கு.குருபரன் ஆகியோரும் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (அ-6-3)

## ஐ.டி.எம் சாவகச்சேரி கிளை கலாஞ்சலி நிகழ்விற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஐ.டி.எம் நிறுவன சாவகச்சேரி கிளை மாணவர்களின் கலாஞ்சலி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இயக்குனர் ஐ.ஆதவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஐ.டி.எம் குழுக் கம்பனிகளின் சர்வதேசப் பணிப்பாளர் வி.ஜன்கன், தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், சாவகச்சேரி நகரசபை தலைவர் ஆர். தேவசகாயம்பிள்ளை, ஐ.டி.எம் சாவகச்சேரி கிளையின் பணிப்பாளர் என்.எஸ்.சர்மா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் தேசிய விருதினை பெற்ற கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் சூரசம்காரம் நாட்டிய நாடகம் இடம்பெறவுள்ளதோடு கலாஞ்சலி புத்தக வெளியீடும் யாழ்.கலாசார ஆடைகளின் அணிவகுப்பு, தனிநடனம், சிவதாண்டவம், மேற்கத்தேயநடனம் என்பனவும் இடம்பெறவுள்ளதாக சாவகச்சேரி நிர்வாக இயக்குனர் அறிவித்துள்ளார். (அ)

## புங்குடுதீவு பிரதான வீதி மழையினால் பலத்த சேதம்

(புங்குடுதீவு)

அண்மையில் பெய்த கடும் மழையினால் புங்குடுதீவு பிரதான வீதியில் சில இடங்கள் பலத்த சேதமடைந்துள்ளன.

வேலணை, புங்குடுதீவு பால வீதி, பெருங்காட்டுச்சந்தி உட்பட பல இடங்களிலேயே வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதேவேளைபண்ணையிலிருந்து குறிகாட்டுவான் வரையான வீதி பல்வேறு இடங்களில் பாரிய அளவில் சேதமடைந்துள்ளதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை சந்திப்பதாக புங்குடுதீவு தனியார் பஸ் உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமது வருமானம் முழுவதும் வாகனங்களை திருத்துவதற்காக செலவிடப்படுகின்றது. அத்துடன் வாகனங்களில் பயணிப்பதற்கும் மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே வீதிகளை திருத்துவதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதேவேளை பண்ணை வீதி சேதமடைந்தமை குறித்து பல தரப்பினராலும் உரிய அதிகாரிகளுக்கு பல தடவை முறையிட்டுள்ள போதிலும் எவரும் அக்கறை கொள்ள வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)




## கட்டாயக்கல்வியை அமுல்படுத்துவது குறித்து அதிபர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் கட்டாயக் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தும் குழுவின் வேலைத்திட்டங்கள், பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுவின் வேலைத்திட்டங்கள் தொடர்பான செயலமர்வொன்று இடம்பெறவுள்ளது.

இச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அண்மையிலுள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட கட்டாயக் கல்வி வயதுடைய 14 வயது முதல் 15 வயது வரையுள்ள பிள்ளைகள் அனைவரும் பாடசாலைக் கல்வியைப் பெற வேண்டும் எனும் நோக்கோடு இச் செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இச் செயலமர்வின் போது பிள்ளைகளை பாடசாலைக்கு வரவழைக்கும் குழுவை வலுப்படுத்தல், பல்வேறு காரணங்களால் பாடசாலைக்கு செல்லாத பிள்ளைகளையும், பாடசாலை சென்று இடைவிலகிய மாணவர்களையும் இனங்கண்டு பாடசாலையில் இணைத்தல், மாணவர்களின் பாடசாலை வரவு ஒழுங்கீனங்களை சீர் செய்தல், கல்வி, கலாசாரம், பண்பாடு பற்றிய விழிப்புணர்வு கூட்டங்களை சமுதாய மட்டத்தில் நடாத்துதல், பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு குழுவின் வேலைத் திட்டங்களை வலுப்படுத்தல் போன்ற விடயங்களை கட்டாயம் கல்விக்கான கட்டளையை அமுல்படுத்தும் குழு கலந்துரையாடவுள்ளது. இதில் குறிப்பிடப்பட்ட பாடசாலை அதிபர்கள் மாத்திரமே கலந்து கொள்ளவுள்ளனர்.

செயலமர்வின் போது வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன், ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. நாகராஜா, வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம், வலிகாமம் வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர் என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (அ)

## முதலாமிடம்



(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட ஆங்கில கட்டுரைப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியின் தரம் 11 ஐச் சேர்ந்த மாணவன் செல்வன் பிரகதீஸ்வரன் குணவரன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (அ)








ஞானவீர சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டுவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட பேராசிரியர் க.தேவராசா, அதிபர் எஸ்.சண்முககுமார், திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன் ஆகியோர் அருகில் நிற்க கோண்டாவில் இராமகிருஸ்ணன் வித்தியாலய அதிபர் சண். வாமதேவன் மங்கல விளக்கேற்றுவதையும், பேராசிரியர் க.தேவராசா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள சாரணிய பாசறையில் யாழ்.பெண்கள்

ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள 95 ஆவது உலக சாரணியப் பாசறையில் பங்கு பற்றுவதற்காக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி சதானந்தம் பிரியதர்சினியும் ஏனைய மாகணங்களில் இருந்து 13 மாண விகளும் 2 வழிகாட்டுநர்களும் (ஆசிரியை) சென்றுள்ளனர்.

மேற்படி உலக பாசறை நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகியுள் ளது. இது தொடர்ந்து எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

பெண் சாரணிய வடமாகாண ஆணையா ளர் திருமதி நீ.தர்மகுலசிங்கம் தலைமையில்



இவ்வணி ஹொங்கொங் சென்றுள்ளது என அகில இலங்கை பெண் சாரணிய சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# ஈராக்கில் மீண்டும் குண்டு வெடிப்பு

## 63 பேர் உயிரிழப்பு



கடந்த சில ஆண்டுகளு க்கு முன்பு குண்டு வெடிப் பால் அதிகம் பாதிப்புக்குள் ளான ஈராக்கில் மீண்டும் நேற்று காலை குண்டு வெடித் தது. இதில் சுமார் 18 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

ஈராக் தலைநகரான பக்தாத்தில் நேற்று காலை திடீரென்று குண்டு வெடித்தது. 63 பேர் உயிரிழந்தனர். இந்த குண்டு வெடிப்பால் அப்பகுதிக்கு அருகில் உள்ள அல் அமால் நகரில் தான் பாதிப்பு அதிகம் உள்ளது என்று தகவல்கள் வெளி யாகியுள்ளன. மேலும் 187 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அவர்களை மீட்பு பணியினர் அருகிலிருக்கும் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

மேலும் இந்த குண்டு வெடிப்பிற்கு பின்னால் இருக்கும் காரணத்தை அறியும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது. (அ-2)

# யாழ்.விடுதிகள் அனைத்தையும் பதிவு செய்ய உத்தரவு

## பிரதி பொலிஸ்மா அதிபர்

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து விடுதி களும் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி க்கு முன்னர் பதிவு செய்யப்படல் வேண்டு மெனவும் அவ்வாறு பதிவு செய்யப்படாத விடுதிகள் மூடப்படும் என வடமாகாணப் பிர திப் பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரன் தெரிவித் தார்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட விடுதி உரி மையாளர்களுடனான சந்திப்பு நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும். போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள பல விடுதிகள் சட் டத்துக்கு முரணானவையாக இயங்கி வருகின் றன. இவற்றில் சில விடுதிகளில் கலாசார சீரழிவு களும் இடம்பெறுகின்றன. இதற்கு சில விடுதி உரி மையாளர்களும் ஒத்துழைத்துவருகின்றனர்.

அண்மையில் கூட யாழ். பொலிஸாரால் கலாசாரச் சீரழிவு இடம்பெறும் விடுதியொன்று முற்றுகை இடப்பட்டு அதன் உரிமையாளர் உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சிலர் தமது வீடுகளிலும் விடுதிகளை நடத்தி வருகின்றனர். இதனால் சுகாதார சீர் கேடுகளும் ஏற்படுகின்றன. விடுதிகளுக்கான சட்டதிட்டங்களுடன் இவ்விடுதிகள் அமுல் படுத்தப்படவில்லை.

இடவசதி, குடிநீர் வசதி, மலசல கூடம், சமையலறை என அனைத்தும் சுகாதாரமாக காணப்படுகின்றதா என அவதானிக்கப்பட்டே விடுதிகளுக்கான உரிமம் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் 89 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் 38 விடுதிகள் விடுதி உரிமம் இல்லாமல் இயங்கி வருகின்றன. இதுவரை காலமும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணாக செயற்பட்டு வந்த விடுதிகள் அனை த்தும் அடுத்தவருடம் பங்குனி மாதத்திற்குள் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யாத விடுதிகள் யாவும் பொலிஸா ரால் முற்றுகையிடப்பட்டு மூடப்படுவதோடு கடு மையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையினால் நடத்தப்பப டும் J/77 கிராமசேவையாளர் பிரிவுக்குட் பட்ட மக்கள் பங்கேற்புடனான கிராம அபி விருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று வெள் ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மருதடி இளம்கதிர் (இளம்சிங்கம்) சனசமூக நிலை யத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்கு பற்றி தங் கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத் துழைப்பை வழங்குமாறு பிரதேச சுற்றாடல் அதிகாரி ரி.என்.சூரியராஜா கேட்டுள்ளார். (அ)

# ஒளிவிழா

(கரவெட்டி)

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவ னத்தின் வருடாந்த ஒளிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியா லய வீதியில் அமைந்துள்ள செவிப்புலனற் றோர் நிறுவனத்தில் நிறுவனத் தலைவர் த. செந்தில்குமார் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர்களுக்கு பரிசில் கள் வழங்கப்படவுள்ளதுடன் கலை நிகழ் வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-3-24)


# அறிவித்தல்

## நல்லூர் பிரதேசசபை-நல்லூர் உப அலுவலகம் ஆதன பெயர் மாற்றம்

**ஆதன இலக்கம்-528 வெற்று, அரியாலை வீதி, வட்டாரம்-12**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் 12, அரியாலை வீதி, 528 வெற்று இலக்க ஆதனமானது செல்லையா தியாகரா ஜாவினுடையது என்றும் அவரின் பிள்ளைகளான காலஞ்சென்ற தியாக ராஜா விக்னேஸ்வரன் மற்றும் கணேஸ் கனகராசா கைம்பெண் யோகேஸ்வரி ஆகியோர் பிதாவழி முதுசமாக வந்தடைந்ததென்றும் குறித்த ஆதனம் தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் 1987ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக அழிந்துவிட்டதென்றும் சொரியலாக இருந்த மேற்படி ஆதனத்தை செல்லையா தியாகராசாவின் இரண்டு பிள்ளைகளும் நிந்தப்படுத்தி உறுதி இலக்கம் 62/07.02.2011 மூலம் முதலாமவரிற்கு 05 பரப்பும், இரண்டாமவரிற்கு 05 பரப்புமாக பிரிவிடல் செய்து முதலாமவரின் பிள்ளைகளான விக்னேஸ்வரன் நுனராஜ். விக்னேஸ்வரன் மகள் நிசாந்தினி, விக்னேஸ்வரன் மகள் அஜந்தினி, விக்னேஸ்வரன் மகள் தர்சினி ஆகியோர் அவர்களில் ஒருவராகிய விக்னேஸ்வரன் மகள் அஜந்தினிக்கு உறுதி இலக் கம் 79/01.04.2011 மூலம் 05 பரப்பையும் இரண்டாமவர் தனது என வெளிப்படுத்திய 05 பரப்பில் தனது பிள்ளையான யோகராசா யோகசீலன் பெண் சிவராஜிக்கு உறுதி இலக்கம் 182/28.11.2011 மூலம் 02 பரப்பும் 2.9 குளியையும் வழங்கி வெளிப்படுத்தி எமது பதிவேட்டில் தனது பெயரில் ஆதனப் பெயர் மாற்றத்தை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

எமது பதிவேட்டில் வெற்றிலக்கமாகக் காணப்படும் குறித்த ஆதனத் திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது விக்னேஸ்வரன் மகள் அஜந்தினி, கணேஸ் கனகராசா கைம்பெண் யோகேஸ்வரி, யோகராசா யோகசீலன் பெண் சிவராஜி ஆகியோருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

23.12.2011

(தி-5266)


# மாணவர்கள் தாக்கியதில் பேராசிரியர் வைத்தியசாலையில்

பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரி யர் சாந்த ஹென்னாயக்க இப்பல்கலைக் கழக மாணவர்களின் தாக்குதலுக்கு உள்ளா கியதால் பேராதனை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை முதல் பேரா தனை பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டிருந்த போது குறித்த பேராசிரியர் உட்பட மூன்று விரிவுரையாளர்கள் விரிவுரை களை மேற்கொண்டமையாலேயே மாணவர் களது தாக்குதலுக்கு உள்ளாகியிருக் கலாம் எனத் தெரிவிக்கும் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள் ளனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்து வெளி யிட்ட உயர்கல்வி அமைச்சர், மாணவர்களால் தாக்கப்பட்ட இரண்டு விரிவுரையாளர்களும் கல்விசாரா ஊழியர் இருவரும் கண்டி வைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அவர் கூறினார்.

இந்த பல்கலைக்கழகமும் மாணவர்க ளின் மரணத்துக்கு காரணமாக அமைந்துள்ள தெனவும் உயர் கல்வியமைச்சர் குறிப்பிட்டுள் ளார்.

நேற்று முன்தினம் நடந்த சம்பவங்களு க்கு விரிவுரையாளர்களில் ஒரு பகுதியினர் நேரடியாக பொறுப்பானவர்களாக இருந்துள் ளனர். சகல மாணவர் சங்கங்களையும் இடை நிறுத்தம் செய்ய உபவேந்தரும் மன்றமும் எடுத்த தீர்மானத்தை தான் ஆதரிப்பதாகவும் அவர் கூறினார்.

மாணவர்கள் இவ்வாறான நடவடிக்கை களை தொடர்ந்தால் அவர்களின் பெற்றோர் கள் வீதியில் இறங்குவார்களெனவும் உயர் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் விபத்து



ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் ஒன் றுக்கொன்று சிறாம்பியடிச் சந்தியில் நேருக் குநேர் மோதியதில் மோட்டார் வாகனத்தை செலுத்தி வந்தவர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

யாழ். நகரிலிருந்து ஸ்ரான்லி வீதியால் வந்துகொண்டிருந்த மோர்ட்டார் சைக்கிளொ ன்றும் நாகவிகாரையிலிருந்து சிறாம்பியடி வீதிக்குள் திருப்ப முயன்ற ஆட்டோவும் நேரு க்கு நேர் மோதின.

இதில் ஆட்டோ பலத்த சேதங்களுக்கு உள்ளாகியதுடன் மோட்டார் சைக்கிளை செலுத்திவந்தவர் மயிரிழையில் உயிர்தப்பி னார்.

இதில் குறித்த மாண்வருக்கு கைகளிலும் கால்களிலும் காயங்கள் ஏற்பட்டு ஆட்டோ சார தியும் அதில் சென்று கொண்டிருந்த பெண் ஒரு வரும் சிறு காயங்களுடன் தப்பினர். (அ-4)

# தேசத்திற்கு மகுடம் நிகழ்வுக்கு 49 கோடியே 50 இலட்சம் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது

## ஹந்துன்நெத்தி எம்.பி. தெரிவிப்பு

நாட்டின் நிதி வளத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கின்ற அரசாங்கம் இரண்டு இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவை தனிநபர் கடனாக சுமத்தியிருக்கின்றது.

போஷாக்கின்மைத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியைவிட தேசத்திற்கு மகுடம் எனும் நிகழ்வுக்கு செலவழித்த தொகையே அதிகம் என்று ஜனநாயக தேசிய கூட்டணியின் கொழும்பு மாவட்ட எம்.பி.சுனில் ஹந்துன்நெத்தி நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு செலவுத்திட்ட இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நாட்டின் 61 ஆயிரத்து 495 குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள போஷாக்கற்ற நிலையில் காணப்படுகின்ற சிறுவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான போஷாக்குத் திட்டத்திற்கென அரசாங்கம் 31.8 கோடி ரூபாவையே ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

எனினும் கடந்த 2010 ஆம் ஆண்டுக்கான தேசத்திற்கு மகுடம் எனும் நிகழ்வுக்காக மாத்திரம் 49 கோடியே 50 இலட்சம் ரூபாவை செலவழித்திருக்கின்றது.

இந்தத் தொகையில் நிதி அமைச்சின் செலவு 11 கோடியே 98 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாவாகும். இது இவ்வாறிருக்க பொதுநலவாய போட்டிகளைப் பெற்றுக் கொள்வதற்கென அழகிகளை அழைத்துச் சென்று நடனமாட வைத்தமை உள்ளிட்ட செலவாக பல கோடி ரூபா பணம் இங்கு விரயமாக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு இலட்சம் இல்லாவிட்டால் இரண்டு இலட்சம் ரூபா என்ற தொகைகளைக் கடனாகப் பெறுவதற்கு செல்கின்ற போது வங்கிகளில் அந்தக் கடன்களை வழங்குவதற்கு காணிகள், வீடுகள் பிணையாகக் கேட்கப்படுகின்றன.

எனினும் திருகோணமலையில் ஐ.தே.க. அமைப்பாளர் ஒருவர் அரசாங்கத்தில் இணைந்துள்ளார். அவருக்கு எந்தவித பிணையும் கேட்கப்படாத நிலையில் 75 மில்லியன் ரூபா கடன் வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறானவர்களுக்கு கடன் பெறுவதற்கான வழி வகைகள் பின்பற்றப்படுவதில்லை.

வரவு செலவுத் திட்டத்திலுள்ள 36 முன்மொழிவுகளில் ஒன்பது முன்மொழிவுகள் மட்டுமே 500 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டவையாக இருக்கின்றன. தேவையான விடயங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு இங்கு இல்லை.

அத்தோடு இலங்கையில் இரவுவேளையில் செலவிடப்படும் பணத்தின் அளவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களை விட இரவுவேளையில் செலவிடப்படுகின்ற பணத்தின் அளவு 9.75 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை ஒன்றை மேற்கோள்காட்டி லங்கா பிஸ்னஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, மீளப்பெறக்கூடிய தங்க முலாம் பூசப்பட்ட ஆபரணங்களின் கொள்வனவு பண்டிகைக்காலத்தை முன்னிட்டு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# போதைப்பொருள் வில்லைகளுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்

போதைப்பொருள் கலந்ததாக சந்தேகிக்கப்படும் ஒரு இலட்சம் வில்லைகளைக் கைப்பற்றியதுடன் சந்தேக நபரொருவரையும் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடொன்றுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் இந்த வில்லைகளை கண்டி தவுலகல ஹெந்தெனிய பிரதேசத்தில் வைத்து கைப்பற்றியதுடன் இவற்றை இரகசியமாகக் கொண்டு சென்ற நபரையும் கைது செய்ததாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வில்லைகளின் ஒரு தொகுதி மேலதிக விசாரணைகளுக்காக அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கண்டி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் கண்டி பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# தனியார் பல்கலை. குறித்த சட்டம் நிறைவேற்றப்படுமா?

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் கொண்டுவரப்படவுள்ள தனியார் பல்கலைக்கழக சட்ட மூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பொம்மையாகவே செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோசலிச தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டாளர் நலிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலவச கல்வியை பாதுகாப்பதற்கான மக்கள் இயக்கம் அண்மையில் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இலவச கல்வி எதிர்நோக்கும் பாதிப்பு குறித்து கருத்து வெளியிட்டார்.

இதுகுறித்து உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிக்கையில், நலிந்த ஜயதிஸ்ஸவின் குற்றச்சாட்டு அடிப்படைத் தன்மையற்றது என குறிப்பிட்டார். (அ-2)

# சிறிகொத்தா மீது தாக்குதல் நடத்த ஊடகங்கள் தூண்டின

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த மீது தாக்குதல் நடத்துவதற்கு மக்களை தூண்டியதாக ஒரு ஊடக வலையமைப்பு மற்றும் அதன் உரிமையாளருக்கு எதிராக கிடைத்துள்ள முறைப்பாடு சம்பந்தமாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நேற்று முன்தினம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சிறிகொத்தாவில் பணியாற்றும் நிர்வாக அதிகாரி ஒருவர் குறித்த ஊடக வலையமைப்புக்கு எதிராக மிரிஹான பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சிறிகொத்த மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக மிரிஹான பொலிஸ் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 17 பேரைத் தவிர நேற்று முன்தினம் வேறு எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


# வவு.இல் வீட்டுத் திட்டத்திற்கான பொருளுதவிகள் வழங்கப்பட்டன



வவுனியா சாளம்பைக்குளத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு வீட்டுத் திட்டத்தினை மேற்கொள்வதற்காக பொருளுதவித்திட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை சாளம்பைக்குளத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம். சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.

யுத்தம் காரணமாக 90 களில் வவுனியா சாளம்பைக்குளத்தில் இருந்து இடம்பெயர்ந்து பல பகுதிகளிலும் வசித்து வந்தவர்கள் மீள 2009 ஆம் ஆண்டு தமது சொந்தக் கிராமத்தில் குடியேற்றப்பட்ட நிலையில் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வாழ்ந்த நிலையில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தினால் வீட்டுத் திட்டத்தை மேற்கொள்வதற்கென கட்டடப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் வதிவிடப்பிரதிநிதி உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ)




## பாடசாலையை புனரமைத்து உயிர்காக்க முன்வருவீர்களா?

யாழ்.வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை 1923 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பழைமையான இப்பாடசாலை கட்டப்பட்ட 88 வருடங்களில் ஒருமுறையாவது புனரமைப்பு செய்யப்படாது மிகவும் சீர்குறைந்த நிலையில் பல காலங்களாக உள்ளது. ஊடகங்களும் இப்பிரச்சினையை வெளிக்கொணர்ந்திருந்தும் கூட இன்றுவரை எந்தவித முன்னேற்றங்களும் இடம் பெற்றதாக இல்லை.

அண்மையில் நுழைவாயிலின் தூண் விழுந்ததில் இப்பாடசாலையின் மாணவனான 6 வயதுச் சிறுவன் ஜெ.செந்தூரன் தலை சிதறி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அனைவரது மனதையும் உறையச் செய்கின்றது. கல்வி கற்பதற்காக பாடசாலை சென்ற சிறுவன் இன்று...? எதிர்காலம் பற்றிய பற் பல கனவுகளுடன் பிள்ளையை பாடசாலைக்கனுப்பிய பெற்றோரின் நிலை...? கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

இவ்வாறான உயிரிழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டின் பாடசாலையின் கட்டடங்கள் மாத்திரமன்றி பாடசாலையின் சூழலுமே சீரமைக்கப்பட வேண்டும்.

கல்வித்துறை சார் உயர் அதிகாரிகளே! பெரியோர்களே! அரசசார்பற்ற நிறுவனங்களே! அறப்பணி நிலையங்களே! கொடையாளர்களே! இப்பாடசாலை மாணவர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் தர முன் வாருங்கள். அடுத்துவரும் புதிய கல்வியாண்டிலாவது உயிர்ப்பயமின்றி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற கைகொடுப்பீர்களா?

*மு.அருமைச்சந்திரன்*
*(பழைய மாணவன்).*

# கப்பம் கோரி மிரட்டிய சந்தேகநபர்கள் கைது

(கொழும்பு)

கொழும்பு பொரளையிலுள்ள வர்த்தகர் ஒருவரிடம் 10 இலட்சம் ரூபா கப்பம்கோரி தொலைபேசி மூலம் மிரட்டிய சந்தேக நபர்கள் இருவரை கொழும்பு குற்றவியல் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சந்தேகநபர்கள் 10இலட்சம் ரூபா பணம் கொடுக்காவிட்டால் வர்த்தகரை கொலை செய்யப் போவதாக பல தடவை தொலைபேசி மூலம் மிரட்டியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இச்சந்தேகநபர்கள் பாதாள உலகைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படுவதாகவும் இவர்களைக் கைது செய்வதற்கு பல பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் இவர்கள் தலைமறைவாகியிருந்ததாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாகவும் இவ் விசாரணைகள் மூலம் பல தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இச்சந்தேகநபர்களை ஜனவரி 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதவான் உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்படவேண்டும்

## மாவை.எம்.பி.கோரிக்கை



வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம் தொடர்பில் எல்லையற்ற நம்பிக்கை கொண்ட அமைப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விளங்குகிறது. இதன்காரணமாகவே ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தி தமது நிலைப்பாட்டையும் வெளியிட்டு வருகிறது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தமிழ்மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் அந்தந்தப் பிரதேசங்களை ஆட்சிசெய்யும் அதிகாரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தேசிய வருமானம் தலா 2ஆயிரத்து 850 அமெரிக்க டொலர் என புள்ளி விபரத் தரவுகள் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் வடக்கில் ஒரு டொலரையேனும் சம்பாதிக்க முடியாத பலர் இருக்கின்றனர்.

இதேவேளை கிழக்கின் ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் ஒருவருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை ஒரு ஜனநாயக விரோதசெயலாகவே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நோக்குகின்றது என்று மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜனாதிபதியின் நன்னடத்தையினால் அவருடன் இணைந்து செயற்படுகிறேன்

## பிரதி அமைச்சர் முரளிதரன் புகழாரம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புகளைப் பேணவில்லை என்று மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் தாம் அங்கம் வகித்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் தொடர்புகளைப் பேணியதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஜனாதிபதியின் நன்னடத்தையினால் அவருடன் இணைந்து செயற்படத் தீர்மானித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவளை முரளிதரனை அரசியல் பிரவாகத்திற்குள் அழைத்துச் சென்றதால் ஏற்படும் நன்மையோ தீமையோ அதனை ஐக்கிய தேசியக்கட்சி பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது நடவடிக்கைகளினால் முரளிதரன் அரசியலில் கால்பதித்தார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் தெரிவித்தபோதே பசில் ராஜபக்ஷ தமது கருத்தை வெளியிட்டார். (அ-2)

# இசட் புள்ளி விவகாரம்

## சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடுகிறது மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

இவ்வருட க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் இசட் புள்ளி தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடியுள்ளது.

இவ்வருடம் பழைய பாடத்திட்டம் மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கான பரீட்சைகள் நடைபெற்றன. இவற்றுக்கு பொதுவான இசட்புள்ளி முறைமையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாரித்துள்ளதாக அந்த ஆணைக்குழு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தப் பொதுவான இசட் புள்ளி முறைமைக்கு எதிரான மாணவர்கள் வழக்குத் தொடரக்கூடும் என்பதால் சட்டமா அதிபரின் ஆலோசனையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடியுள்ளதாக மேற்படி அதிகாரி கூறினார்.

இசட் புள்ளி விவகாரம் காரணமாக இவ்வருடம் க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மோசடியில் ஈடுபட்டவர்கள் பரீட்சைக்குத் தோற்றத்தடை

## பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டிற்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகளின்போது பரீட்சை மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட 15 மாணவர்களுக்கு பரீட்சை எழுதுவதற்கு தடை விதிக்கப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை பரீட்சை கண்காணிப்பாளர்கள் நால்வர் மற்றும் பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரிகள் நால்வர் ஆகியோருக்கும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வருட க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் நேற்று முன்தினம் முடிவுற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை வாழ்த்தி வரவேற்ற ஆளும்கட்சி

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க சபைக்குள் பிரவேசித்தபோது ஆளும் கட்சி எம்.பி.க்கள் மற்றும் அமைச்சர்கள் மேசையில் தட்டி வரவேற்றனர். அத்துடன் கோஷமும் எழுப்பினர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட இறுதி நாள் விவாதத்தின் போது பதிலுரையை ஆற்றுவதற்கு சபைக்கு வருகை தந்தார்.

ஜனாதிபதியின் வருகைக்கு முன்பதாக விவாதத்தில் ஐ.தே.க.எம்.பி. ஹர்ஷ டி சில்வா உரையாற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபைக்குள் பிரவேசித்தார்.

இதன்போது அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர் என ஒருமித்த கோஷத்துடன் மேசையில் தட்டி வரவேற்றனர்.

எனினும் எதிர்க்கட்சித் தலைவர் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். சுமார் 10 நிமிடங்கள் ஜனாதிபதியின் உரையை செவிமடுத்த அவர் மாலை 4.30 மணியளவில் சபையில் இருந்து வெளியேறினார்.

இதேவேளை, மதியம் சபைக்குள் பிரவேசித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் எம்.பி.யுமான சஜித் பிரேமதாச, அகில விராஜ் காரியவசம், எரான் விக்கிரமரட்ன, கபிர் ஹாசிம் ஆகிய எம்.பி.க்களுக்கு கைலாகு கொடுத்து ஏதோ பேசினார். எனினும் சபையில் இருந்த அக்கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பியை அவர் கண்டுகொள்ளவில்லை.

இதன் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சபைக்குள் வந்த முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவையும் ஆளும் கட்சியினர் மேசையில் தட்டி வரவேற்றனர். வாழ்த்தும் தெரிவித்தனர்.

### ரணில் வெற்றிபெற்றதன் பின்னர் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி

ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இரண்டாவது பலம்வாய்ந்த பதவியை இன்னுமொருவர் பெறுவதற்கும் வழியமைத்துக் கொடுத்தவர் ரணில் என்பது தனது தனிப்பட்ட கருத்து என்று கூறினார்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் ஜனநாயகத்தை பற்றி பேசும் சிலர் அந்த முடிவுகளை ஏற்க முடியாது. தங்கள் குண்டர்கள் ஊடாக வன்முறைகளில் ஈடுபட்டது வேதனை அளிக்கிறதென்றும் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தொழில் செய்யும் பெண்கள் தாய்ப்பாலூட்ட இலகுவழி

தொழிலுக்கு செல்லும் தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டுவதை இலகுபடுத்தும் வகையில் விசேட திட்டமொன்றினை குடும்பநல சுகாதார அலுவலகம் முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய கொழும்பு குடும்பநல சுகாதார அலுவலக வளாகத்தில் குழந்தைகள் காப்பகமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் வைத்தியநிபுணர் தீப்தி பெரேரா கூறியுள்ளார்.

கொழும்பு நகரில் தொழில்புரியும் தாய்மார்கள் தமது குழந்தைகளை குறித்த காப்பகத்தில் ஒப்படைத்து தொழிலுக்கு சென்று மீண்டும் தாய் பாலூட்டுவதற்கு அங்கு வரமுடியுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்காலத்தில் இத்தகைய குழந்தைகள் காப்பகங்களை பிரதேச மட்டத்தில் ஸ்தாபிக்கவும் குடும்பநல சுகாதார அலுவலகம் உத்தேசித்துள்ளது. (அ-2)





யாழ். பல்கலைக்கழக பராமரிப்புப் பகுதியின் வருடாந்த ஒன்றுகூடலும் எந்திரவியலாளர் எஸ்.தயாபரனின் பிரியாவிடை நிகழ்வும் யாழ். பல்கலைக்கழக பராமரிப்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரியாவிடை நாயகன் எஸ்.தயாபரனையும் அவரது பாரியாரையும் அழைத்துவருவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உ.சாளின்)

# சீனாவின் புதிய கடற்படைத் தளம் தென்னிந்தியாவிற்கு ஆபத்து...!

## சீனா, பாகிஸ்தான் கடற்படைக்கு நவீன ஆயுதம்.. வங்கக்கடல் விடயமாக பர்மாவுடன் ஒப்பந்தம்.... இந்துமாகடலில் கடற்படைத்தளம்..! இந்தியா...?

போர்க்குற்றங்களைப் புறந்தள்ளி இலங்கைக்கு இந்திய அரசு ஆதரவளிக்க முக்கிய காரணம் சீனா. இலங்கைக்கு நாம் உதவி செய்யாவிட்டால், அந்த இடைவெளியில் நமது மாபெரும் எதிரியான சீனா, இலங்கைக்கு ஆதரவுக்கரம் கொடுக்கும். அத்தோடு, நமக்கு பக்கத்தில் தன் கடற்படைத் தளத்தை சீனா அமைத்தால் அது தலைவலி தான். அப்படிச் செய்தால், தமிழகம் உட்பட தென்னிந்திய மாநிலங்களின் பாதுகாப்புக்கு அது பெரும் அச்சுறுத்தலாக அமையும். இவற்றையெல்லாம் யோசித்துத்தான் இலங்கைக்கு உதவுகின்றோம். என்று சொல்லி இலங்கை இராணுவத்துக்கு உதவியது மத்திய அரசு. ஆனாலும், எதை நினைத்து மத்திய அரசு பயந்ததோ அது கடைசியில் நடந்தே விட்டது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு அமெரிக்காவுக்கு சவால் விட்டுக் கொண்டிக்கும் ஒரே நாடு சீனா தான். பொருளாதாரம், ஆயுத உற்பத்தி, தொழில்த்துறை என்று பல விடயங்களில் அமெரிக்காவுக்கு சவால் விட்டாலும், பக்கத்திலேயே தனக்கு இணையாக இந்தியாவும் வளர்ந்து வருவதை சீனாவால் ஜீரணிக்க முடியவில்லை.

சீனாவுக்கு நிகராக வளர இந்தியாவுக்கு உதவும் முக்கிய காரணங்களில் ஒன்று அதன் கடல் பகுதி வங்காளவிரி குடா, இந்துமாகடல், அரபிக் கடல் என்று மூன்று பக்கமும் விரிந்துள்ள கடல் பகுதிகளில் சுதந்திரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது இந்தியா. இந்தக்கடல் வழிப்பாதைகளில் எந்தத் தடைகளும் இன்றித் தன் சரக்குப் போக்கு வரத்துக்களை இந்தியா செய்து வருகிறது. இதைத் தடுத்து இந்தக் கடல் பகுதிகளில் இந்தியாவுக்கு நெருக்கடியைக் கொடுப்பதே சீனாவின் திட்டம்.




இந்து சமுத்திரப் பிரதேசம்

இதற்கு முதல் கட்டமாக பாகிஸ்தான் கடற்படைக்கு நவீன ஆயுதங்களை வழங்கி, அங்கே இந்தியாவுக்கு செக் வைத்தது. அடுத்ததாக பர்மாவுடன் ஒப்பந்தம் போட்டு வங்கக் கடலில் இந்தியாவின் ஆதிக்கத்துக்கு வேட்டு வைக்கும் சீனா, இந்துமாகடலில் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டு இருந்தது. அப்போது தான் சீஷெல்ஸ் தீவுகள் அதன் கண்ணில் சிக்கியது.


சீன ஜனாதிபதி ஹூ ஜின்ராவ

இந்து மாகடலில் இந்தியாவுக்கு தென் மேற்கே சுமார் மூவாயிரம் கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் தீவுக்கூட்டம் தான் சீஷெல்ஸ் தீவுகள். 115 தீவுகளைக் கொண்டிருக்கும் இந்நாட்டின் மொத்த மக்கள் தொகையே எண்பத்தைந் தாயிரும் பேர்தான். இராணுவ பலமோ வெறும் 500 வீரர்கள் மட்டுமே! பாதுகாப்பு விடயத்தில் கொஞ்சம் வீக்காக இருக்கும் இந்நாட்டின் முக்கிய பிரச்சனை கடற்கொள்ளை. இந்த வழியாகச் செல்லும் கப்பல்களை அடிக்கடி கொள்ளையர்கள் தாக்க, அதிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வெளிநாட்டு உதவிகளையே நம்பியிருந்தது அந்நாடு. இது சீனாவின் காதுகளை எட்டியதும் அதன் இராஜதந்திர மூளை யோசிக்கத் தொடங்கியது.


இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங்குவாங்லி, உடனடியாக சீஷெல்ஸ் தீவுக்கு அனுப்பட்டார். அதன் விளைவாக, கடற் கொள்ளையர்களுக்கு எதிராகப் போராட தங்கள் நாட்டில் ஒரு கடற்படைத் தளத்தை அமைக்குமாறு சில நாட்களி லேயே சீனாவுக்கு அழைப்பு விடுத்தது சீஷெல்ஸ். இதற்காகவே காத்திருப்பதைப் போல் சீனாவும் கடற்படைத் தளத்தை அமைக் கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தாகத் தகவல். தங்கள் நாட்டுக்கு வெளியே சீனா அமைக்கும் முதல் கடற்படைத் தளம் இது.

சீஷெல்ஸ் தீவில் கடற்படை முகாம் அமைக்கும் செய்தியை இப்போதைக்கு மறுக்கும் சீனா, "ஐ.நா.பாது காப்பு சபையில் உள்ள ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் சீனாவுக்கு மட்டும் தான் வெளிநாடுகளில் கடற் படைத்தளம் இல்லை. எங்கள் வீரர்களை பிறநாடுகளில் நிறுத்தி வைக்கும் எண்ணமும் இல்லை. கடற் கொள்ளையர்களைத் தடுப்பதற்காக இந்து மாகடலில் எங்கள் கப்பல்கள் ரோந்து செல்கின்றன. அவற்றுக்குத் தேவையான எரிபொருட்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை சேகரித்து வைக்கும் ஓர் இடத்தைத் தான் சீஷெல்ஸ் தீவுகளுக்கு அருகே அமைக்கிறோம்" என்று கூறியுள்ளது.

இருப்பினும் சீனாவின் இந்த விளக் கத்தை மறுக்கும் அமெரிக்க உளவுத்துறை, அப்பகுதியில் உள்ள கடற் பகுதி முழுக்க தங்கள் ஆதிக் கத்துக்குள் கொண்டுவரும் நோக்கத்துடனேயே சீனா சீஷெல்லினுள் நுழைவதாக எச்சரிக்கிறது.

இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் இந்தியாவுக்கு, அதிலும் தமிழ் நாட்டுக்கு அதிக ஆபத்துக்கள்வர வாய்ப்பு இருக்கிறது. சீன இராணுவத்திடம் மூவாயிரம் கிலோ மீட்டரில் இருந்து எட்டாயிரம் கிலோமீட்டர் தூரம் வரை பாய்ந்து தாக்கும் ஏவுகணைகள் பல உள்ளன. போர்க் காலங்களில் இதைப் பயன்படுத்தி தென் இந்தியப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தலாம். போதாக் குறைக்கு இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வேறு, புலிகளை அழித்ததற்கு உதவியதற்காக சீனத்திற்கு நன்றி சொல்லியிருக்கிறார். இனியாவது இந்தியா விழித்தால் சரி!

# தியானம்

## ஆனந்தத்தின் வாசல்



ஆன்மீகம் 17

**கேள்வி:** நமது புராணங்களில் சாத்வீக உணவு என்றும், தாமச உணவு என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நீங்கள் பரிசோதனை செய்திருக்கிறீர்களா? அதைப்பற்றிச் சொல்ல முடியுமா?

**சத்குரு:** சில உணவுகள் உடலியக்க அமைப்பில் ஒரு மந்தத் தன்மையை ஏற்படுத்தும். அவற்றை நீங்கள் பரிசோதனை மூலம் அறிந்து கொள்ள முடியும். சில உணவுகள் உங்களை மிகவும் விழிப்பாய் இருக்கச் செய்யும். எனவே தேர்ந்தெடுப்பது நீங்கள் தான். உங்கள் வாழ்க்கை முழுவதும் உறங்கிக் கொண்டிருக்கவே நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது மிகவும் விழிப்போடு செயல்பட விரும்புகிறீர்களா? என்பது தான் கேள்வியே. நீங்கள் விழிப்போடும், உயிர்ப்போடும் இருக்க வேண்டுமானால் அதற்கேற்ப உணவை உண்ண வேண்டும். உங்கள் வாழ்க்கை முழுவதும் நீங்கள் மந்தமாக உறங்கிக் கொண்டிருக்க விரும்பினால், வேறுவிதமான உணவை நீங்கள் உண்ணலாம். எனவே ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தேர்ந்தெடுத்து அவருக்கு விருப்பமானதை உண்ணுவதைப் பற்றியது இது. எனவே இதைப்பற்றி மிகவும் கடினமான குறிப்புகளையெல்லாம் நாங்கள் தருவதில்லை. நீங்கள் இதைத்தான் சாப்பிட வேண்டும், அதைத்தான் சாப்பிட வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதில்லை. அப்படிச் செய்வது காலப்போக்கில் பலனளிக்காமல் போகக்கூடும். எனவே, ஒவ்வொரு தனி மனிதரும் அவர் எதைச்சாப்பிட வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுத்து சாப்பிடவேண்டும். அதுதான் சிறந்தது. எனவே, நாங்கள் பயிற்சிகளில் பங்கேற்பவர்களிடம் சொல்வது என்ன வென்றால், ஒவ்வொரு விதமான உணவும் எத்தகைய தன்மையைக் கொண்டிருக்கிறது என்பதைத் தான். அதை அவர்கள் பரிசோதித்துப் பார்த்து எது அவர்களுக்குத் தேவையோ அதை அவர்கள் தேர்ந்தெடுத்து சாப்பிட முடியும்.

**கேள்வி:** நடனப்பயிற்சி, விளையாட்டு, யோகப்பயிற்சிகளைப் பற்றி நீங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறீர்கள். தன் உடலை ஒரு கோவிலாக மதிக்கும் மனுதனுக்கு இவை எப்படி முக்கியமாகிறது?

**சத்குரு:** நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், குறைந்த பட்சம் இந்தப் பிறவிக்காவது நீங்கள் இந்த உடலில்தான் வாழ்ந்தாக வேண்டும். இந்த வீட்டை நீங்கள் சீரழித்து விட்டால், இதை விட்டு வெளியேறி வேறு வீட்டிற்குத்தான் போக முடியும். இந்த ஒன்றை சீரழித்து விட்டால் சாகும் வரை நீங்கள் துன்பப்படுவீர்கள். எனவே நீங்கள் இதற்கு போதுமான கவனமும், மதிப்பும் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால், இந்த உடல் என்பது பிறக்கும் போது மிகவும் சிறியதாக இருந்தது. தற்போது இவ்வளவு பெரிதாக வளர்ந்திருக்கிறது. எனவே படைப்பின் மூலம் என்பது உங்களுக்குள் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, யாரை படைத்தவர் என்று சொல்கிறீர்களோ அவர் உங்களுக்குள் இருந்து இயங்கிக் கொண்டிருக்கிறார். எனவே படைத்தவர் இருக்கும் இந்த உடலை நாம் கோவில் என்று அழைக்கிறோம். அப்படி நீங்கள் இதனை பராமரிக்காவிட்டால், தூய்மையாகவும் தெளிவாகவும் வைத்துக் கொள்ளாவிட்டால், படைத்தவர் என்பவர் உங்களுக்குள் இயங்கிக் கொண்டிருக்கிறார், என்பதை நீங்கள் இன்னும் உணரவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால், அவர் அங்கே இருக்கிறார். உடல் என்பதை வெளியிலிருந்து நீங்கள் உருவாக்கவில்லை. இது உள்ளிருந்து உருவாக்கப்பட்ட ஒன்று. எனவே படைப்பின் மூலமானவர், படைத்தவர் இதற்குள் இருக்கும் போது நிச்சயமாக நீங்கள் இதனை ஒரு கோவிலைப் போலத்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். கோவில் என்பதும் அது தான். அதைவிட படைத்தவரைத் தாங்கியிருக்கும் உடல் என்னும் இந்த வீடுதான் உண்மையான ஒன்று. நீங்கள் உருவாக்கியிருக்கும் வடிவங்களும் உருவங்களும் உண்மையானவை அல்ல. உண்மையான படைத்தவர் என்பவர் உங்களுக்குள் இருக்கிறார். படைப்பின் மூலமே உங்களுக்குள் இருக்கிறது. நீங்கள் அதை உணராவிடில், படைத்தவருக்கு நன்றி உணர்வோடு இல்லாவிடில், இந்த உடலை நீங்கள் சீரழித்து விடுவீர்கள். உங்களுக்கு சிறிதளவு நன்றியும் அறிவும் இருக்குமானால், நிச்சயமாக நீங்கள் இந்த உடலை ஒரு கோவிலைப் போல பார்த்துக் கொள்வீர்கள்.

(முற்றும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# மலேசியாவில் பயண இலக்கியம் ஒரு கண்ணோட்டம்

03

மகாராஷ்ட்ரா மாநில அரசின் அழைப்பின் பேரில் அஜந்தா சுற்றுலா கருத்தரங்கில் மலேசியப் பத்திரிகையாளர் குழுவில் இடம் பெற்றிருந்த விவேகன், அஜந்தா, எல்லோரா குகைச் சிற்பங்களைப் பற்றி மிகவும் நயமாக எழுதியுள்ளார். அதேபோன்று அதற்குத் தோதாகப் படங்களையும் இணைத்திருப்பது வாசகர்களின் கண்களுக்கு அஜந்தாவை நேரில் நிறுத்தி இரசிக்க வைத்தது போன்ற உணர்வைத் தருகிறது!

காங்காரு வாழும் கண்டம் எனும் கட்டுரை ஆஸ்திரேலியாவின் தலைநகரான கான்பெராவில் மாஸ் தொடங்கியுள்ள விமானங்களைப் பழுது பார்க்கும் பயிற்சியிலுள்ள மலேசியர்களைப் பேட்டி காணச் சென்ற போது எழுதப்பட்டதாகும். மலேசியத் துணைப்பிரதமர் துன் அப்துல் ரசாக் தலைமையில் சரவாக் சென்ற பத்திரிகையாளர் குழுவில் இடம்பெற்று இவர் எழுதிய கட்டுரை, கண்டேன் சரவாக்கை. வெறும் கருத்துக்களை மட்டும் சொல்லாமல் நகைச்சுவையாகவும் பயண அனுபவத்தைக் கொண்டு சென்ற பாங்கு சிறப்பாக உள்ளது!

### இர.ந.வீரப்பனின் உலகத்தமிழர்

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத் தலைவராகவும், சிறந்த ஆய்வாளராகவும் விளங்கிய இர.ந.வீரப்பன் பல நாடுகளுக்குப் பயணம் செய்தவர்.

ஆனந்த விகடனில் 1970 ஆம் ஆண்டுகளில் அமரர் மணியம் இதயம் பேசுகிறது என்ற தலைப்பில் பல நாடுகளுக்குச் சென்று பல அரிய தகவல்களை எழுதினார்.

அவரைப் போன்று இர.ந.வீரப்பன் தனது சொந்தப் பணத்தில் பல நாடுகளுக்குச் சென்றும், செல்ல இயலாத நாடுகளிலிருந்து நண்பர்கள் மூலமாகவும் பல வரலாற்றுச் சான்றுகளைத் திரட்டி உலகத் தமிழர் என்ற அரிய நூலை எழுதினார்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பரிசு பெற்ற இந்நூலை அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் 16.4.1986 இல் கோலாலம்பூர் பான்பசிஃபிக் விடுதியில் வெளியிட்டார்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

390 பக்கங்களில் இர.ந.வீரப்பன் 1976 முதல் 1985 வரை இந்தியா, இலங்கை, பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சிங்கப்பூர், அந்தமான் போன்ற பகுதிகளுக்குச் சென்று திரட்டிய தகவல்களோடு இதர பல நாடுகளைப் பற்றியும் தமிழர்களின் நிலையைப் பற்றியும் எழுதியுள்ளார்.

படங்கள் ஏதும் இதில் இல்லை. மேலும் பல நூல்களையும் ஆய்விதழ்களையும் கொண்டு இந்நூல் எழுதப்பட்டிருந்தாலும், அந்தச் சான்றுகளுக்கான முழுவிபரங்கள் நூலில் குறிப்புகளாக இடம்பெறாதது பிற்கால ஆய்வாளர்களுக்குப் பெரும் சிரமத்தைக் கொடுக்கும்.

உலகத்தமிழர்- பாகம்2, 1996 இல் வெளிவந்தது. பின்னர் மூன்றாம் பாகமும் வெளிவந்துள்ளது. இவற்றில் படங்கள் உள்ளன. உலகத்தமிழர்-முதலாம் பாகத்தையும் ஒரு முழுமையான பயண இலக்கிய நூலாகக் கொள்ள முடியாது. அஃது ஓர் சமூக ஆய்வு நூலாகக் கொள்வதே சிறந்தது. இருப்பினும் உலகம் சுற்றிய தமிழர் எனும் சிறப்புடன் திகழும் அமரர் இர.ந.வீரப்பன் ஆய்வுப் பயணங்களுக்கு ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தியவர் என்றால் அது மிகையாகாது.

### சை.பீர்.முகம்மதுவின் இரு நூல்கள்

மலேசிய நாட்டின் முன்னணி எழுத்தாளர்களுள் ஒருவர் சை.பீர் முகம்மது. பயண இலக்கியத்தில் புதிய பரிணாமத்தைச் செய்தவர். நிறைய வாசிக்கின்றவர். பல விவரங்களை நுணுக்கமாகப் பார்க்கின்றவர்.

நண்பர்கள் சிலரின் கூட்டுறவோடு முகில் எண்டர்பிரைஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கிப் பல நூல்களை வெளிக்கொணர்ந்தவர். அந்தவகையில் 1997 இல் தனது ஆஸ்திரேலியப் பயணத்தைக் கருவாகக் கொண்டு கைதிகள் கண்ட கண்டம் என்ற நூலை 136 பக்கங்களில் வெளியிட்டார்.

மலேசிய நண்பன் நாளிதழில் தொடராக .வெளிவந்த இந்தக் கட்டுரை பலரின் பாராட்டுதலைப் பெற்றதாகும். இவருடைய வெண் மணல் சிறுகதைத் தொகுப்பு அறிமுகவிழா சிட்னியில் நடைபெறும் பொருட்டு அவுஸ்திரேலியப் பயணம். இருப்பினும் அதுவே முழுக் காரணமாக அமைந்து விடாமல் மலேசியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஓர் அறிமுகத்தைச் செய்ய இந்தப் பயணத்தை இவர் நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

ஆ.குணநாதன் -மலேசியா

(தொடரும்)

# இலங்கையில் தற்போது யுத்தம் முடிந்து அமைதி திரும்பியுள்ளது

## இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் புகழாரம்



(கொழும்பு)

இலங்கையில் பல வருடங்களாக நடைபெற்ற யுத்தம் பல உயிரிழப்புகளையும் பல்வேறு பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது யுத்தம் முடிந்து நல்லதொரு எதிர்காலம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர வேண்டும் என்பதையே ஜேர்மனி விரும்புகின்றது என இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் எச். இ. ஜென்ஸ் புளோட்னர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் தன்னாமுனை மியான்மி மண்டபத்தில் இடம்பெற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி ஊடாக சமாதானத்தை கட்டியெழுப்புதல் செயற்றிட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற ஒரு தொகுதி இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ் மற்றும் தொழில் உபகரணம் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் உரையாற்றிய ஜேர்மன் தூதுவர், பல வருடங்களாக நடைபெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு கிரமங்களை எதிர்கொண்டிருப்பார்கள். உறவினர்களை இழந்திருப்பார்கள்.

இது போன்றதொரு செயற்பாடு இனி ஒரு காலத்தில் இடம்பெறக்கூடாது என்றே விரும்புகின்றோம்.

இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சியினை வழங்கும் இந்தத் திட்டத்தினை இந்த நோக்கத்தின் அடைப்படையிலேயே ஜேர்மன் அரசாங்கம் செய்து வருகின்றது.

அதனை உங்களைப் போன்ற பயிற்சிகளைப் பெற்ற இளைஞர்கள் திறமையாகக் செயற்படும் போதுதான் தொழிற்பயிற்சி வெற்றிகரமானதாக நிறைவடையும்.

இறந்தவர்களை நாம் ஒன்றும் செய்துவிடமுடியாது. ஆனால் உயிருடன் இருப்பவர்களை மேம்படுத்தலாம். அந்த நோக்கம் கருதியே எமது அரசாங்கம் நிதியுதவியைச் செய்கின்றது.

இந்தத் திட்டத்தின் மூலம் நீங்கள் முழுமையான பயனைப் பெறுவீர்கள் என்று நம்புகின்றேன். இதனை விடவும் சிறப்பான நிபுணத்துவம் பெற்றவர்களாக திகழ வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நடைபெற்று வருகின்ற இச் செயற்றிட்டத்தின் கீழ் யுத்தம் மற்றும் சுனாமி என்பனவற்றினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகள் தொழிற்பயிற்சியை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பேராதனை பல்கலை. மாணவர்களின் எதிர்ப்பு பேரணி கைவிடப்பட்டது

### சஞ்சீவ பண்டார தெரிவிப்பு

பேராதனை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் தமது எதிர்ப்பு பேரணியை கைவிட்டுள்ளனர். தமது எதிர்ப்பு பேரணியை தாம் தற்காலிகமாக கைவிட்டுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

இம் மாணவர்கள் பேராதனையில் இருந்து கொழும்பு நோக்கி இப்பேரணியை நடத்த விருந்தனர். இதற்கு நீதிமன்றம் தடை விதித்தது.

எனினும் இந்த தடையை மீறி மாணவர்கள் பேரணியில் கலந்து கொண்டதால் இராணுவம் மற்றும் பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். தொடர்ந்தும் பேரணியில் செல்ல முடியாத நிலையில் மாணவர்கள் களைந்து சென்றதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

## கட்சியின் மறுசீரமைப்புக்காக பாடுபட்டவர்களே கைதாகினர்

### கருஜயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிகொத்த அலுவலகம் மீது தாக்குதல் நடத்தி சேதம் ஏற்படுத்தியமை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அந்த பிரச்சினையை வைத்து, தமக்கு ஆதரவளித்தவர்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு பணிகளுக்கு முன்நின்று பாடுபட்டவர்களே இவ்வாறு பொய்யான குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்போது கைது செய்யப்பட்டுள்ளவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் குழப்பம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டவர்கள் அல்ல எனவும் ஜயசூரிய கூறியுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ளவர்களை நேற்று முன்தினம் மிரிஹான பொலிஸ் நிலையத்திற்கு சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்தவர்கள் மீது பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தி கைது செய்துள்ளதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (அ-2)

## ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராக பிரசாரம் செய்வோருக்கு நடவடிக்கை

### வெளிவிவகார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராக போலிப் பிரசாரங்களை முன்னெடுக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு எதிராக சர்வதேச ரீதியாக பல்வேறு நிறுவனங்கள் போலிப் பிரசாரங்கள் முன்னெடுத்து வருவதாக பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவிக்கிறார்.

ஏற்கனவே அத்தகைய நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் அமைப்பு என்ற போர்வையில் சில நிறுவனங்கள் செயற்படும் விதம் கவலையளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட திரைப்படங்கள் போன்றவற்றில் நடித்து பணம் சம்பாதிப்பதற்காக இலங்கை தொடர்பில் தவறான தரவுகளை குறித்த நிறுவனங்கள் வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் இலங்கையிலுள்ள இராஜதந்திரிகளை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிடுகின்றார். (அ-2)

## பிரதியமைச்சர் கப்பம் பெற்றதாக ரவி கருணாநாயக்க எம்.பி.தகவல்



(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதி அமைச்சர் ஒருவர் கப்பம் பெற்றதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க இது தொடர்பான முறைப்பாட்டை ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அளித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதியையும் அவர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரதியமைச்சர் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 3.5 மில்லியன் ரூபாய்களை கப்பமாக பெற்றுள்ளதாக ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம். அஸ்வர் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட கடிதம் தொடர்பிலான இந்தக் குற்றச்சாட்டு குறித்து ஒழுக்கார்று பிரச்சினையை எழுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

## பகிடிவதைக்குள்ளான மாணவி வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

ருஹுணு பல்கலைக்கழகத்தில் கடுமையான முறையில் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்ட முதலாம் ஆண்டு மாணவி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாணவி பல்கலைக்கழகத்தில் சிற்றுண்டிச்சாலைக்குள் வைத்து பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவிகள் சிற்றுண்டிச்சாலைக்குள் மாணவர்களை வரிசையாக நிறுத்தி நெரிசலை ஏற்படுத்தியபோதே குறித்த மாணவி காயமடைந்துள்ளார்.

காயமடைந்த மாணவி சுயநினைவின்றி மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## கால்வாயிலிருந்து சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

அநுராதபுரம் நொச்சியாகமம் பிரதேசத்தில் நாவற்குளம் பகுதி கால்வாய் ஒன்றிலிருந்து இரு யுவதிகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

யுவதிகளின் சடலங்களை நேற்று முன்தினம் பிற்பகல் கண்டெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த 19 ஆம் திகதியிலிருந்து இந்த யுவதிகள் இருவரும் காணாமல் போயுள்ளதாக நொச்சியாகமம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். நொச்சியாகமம் காலதிவுல்வெவ பகுதி யைச் சேர்ந்த இரண்டு யுவதிகளே சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளனர். (அ- 2)

# ஜனாதிபதி கூறிய அறிவுரையை பொன்சேகா கேட்கவில்லை

## அமைச்சர் பீலிக்ஸ்

(கொழும்பு)

ஜனாதிபதிதேர்தலில்தான்வெற்றி பெறுவது உறுதி அதனால் தேர்தலுக்கு பின்னர் தன்னுடன் இணைந்து கொள்ளுமாறும் தங்களுக்குரிய கௌரவத்தை உரிய வகையில் வழங்குவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சரத்பொன்சேகாவிற்கு அறிவுரை வழங்கியிருந்தார் என்று அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 21 அமைச்சுக்கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி தேர்தலில் நான் வெற்றிபெறுவது உறுதி. அதனால் நான் தேர்தலில் போட்டியிட்டதன் பின்னர் என்னுடன் இணைந்து கொள்ளுங்கள்.

இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகுவதற்கு முடிபு செய்தார்.

இதனை அறிந்துகொண்ட ஜனாதிபதி அவரை அழைத்து உங்களின் பிரச்சினை என்ன? எதுவானாலும் பேசி தீர்மானிப்போம் என்று பொன்சேகாவிடம் தெரிவித்தார். இல்லை தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போகின்றேன் என்று பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து ஜனாதிபதி அவருக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி ஜனாதிபதி தேர்தலில் நான் வெற்றியீட்டுவது உறுதியாகிவிட்டது என்பதனால் இந்த முடிவால் நீங்கள் பின்னர் வருத்தப்படுவீர்கள் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பேச்சை சரத் பொன்சேகா கேட்கவில்லை. அதனால் அவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

அன்று ஜனாதிபதியின் பேச்சை கேட்டிருந்தால் இன்று சரத் பொன்சேகா கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம் என்றார்.

(அ-2)

# ஆளும்கட்சிக்கு எதிராக செயற்படும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர் மீது நடவடிக்கை

## கட்சித் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஆளும்கட்சிக்கு எதிராக செயற்படும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை சுதந்திரக் கட்சித் தலைமையகம் எச்சரித்துள்ளது.

குறிப்பாக பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகரசபைகளுக்கான வரவு செலவுத்திட்ட யோசனைகளை தோற்கடிக்கும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை சுதந்திரக் கட்சி தலைமையகம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களில் சிலர் ஒத்துழையாமை முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் இந்நிலையில் ஆளும் கட்சியில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்ட யோசனையை எதிர்க்கும் ஆளும் கட்சி பிரதிநிதிகளின் உறுப்பினர் பதவியை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறு வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கும் பிரதிநிதிகள் கட்சியின் உறுப்புரிமையை இழக்க நேரிடும் என்று கட்சியின் தலைமை அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் இது தொடர்பான கூட்டம் அண்மையில் நடைபெற்றபோதே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக ஆளும் கட்சியின் உள்ளூராட்சி மன்ற வரவு செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)

# முகப்புத்தகம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு

## கணனி அவசர செயற்பாட்டு பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பேஸ்புக் எனப்படும் முகப்புத்தகம் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏனைய நபர்களின் கணக்குகளில் அநாவசியமாக வெளிநபர்கள் பிரவேசிப்பது குறித்து நாளாந்தம் முறைப்பாடுகள் செய்யப்படுவதாக கணனி அவசர செயற்பாட்டுப் பிரிவின் முகப்புத்தக பகுதி பாதுகாப்பு பொறியியலாளர் ரோஹண பல்லியகுரு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போலியான முகப்புத்தக கணக்குகள் குறித்த முறைப்பாடுகளும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் இதுவரை முகப்புத்தக மோசடி தொடர்பில் ஆயிரத்து 750 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக கட்டிக்காட்டிய அவர் இந்த முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# 2011.12 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1783-ஜோர்ஜ் வோஷிங்டன் இராணுவத் தளபதி பதவியில் இருந்து விலகினார்.

★ 1914-முதலாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் நியூசிலாந்துப் படைகள் கெய்ரோவில் தரையிறங்கின.

★ 1916-முதலாம் உலகப் போர்: எகிப்தின் சினாய்க் குடாவில் கூட்டுப் படைகள் துருக்கியப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் வெற்றி பெற்றன.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய இராணுவம் வேக் தீவை கைப்பற்றியது.

★ 1947-முதலாவது டிரான்சிஸ்டர் பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

★ 1948-பிரதமர் டோஜோ உட்பட ஏழு ஜப்பானியப் போர்க் குற்றவாளிகளுக்கு டோக்கியோவின் சுகோமோ சிறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

★ 1954-முதலாவது மனித சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் மேற்கொள்ளப்பட்டது.

★ 1958-உலகின், மிகப்பெரிய இரும்பினாலான டோக்கியோ கோபுரம் திறக்கப்பட்டது.

★ 1972-நிக்கராகுவா நாட்டின் தலைநகர் மனாகுவாவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

★ 1972-தென்னமெரிக்காவில் ஆண்டீஸ் மலைத் தொடரில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிர் தப்பிய 16 பேர் 73 நாட்களுக்குப் பின்னர் காப்பாற்றப்பட்டனர்.

★ 1979-சோவியத் படையினர் ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர்.

★ 1986-எங்கும் தரையிறங்காமல் முதன் முதலில் உலகைச் சுற்றி வந்த வொயேஜர் விமானம், டிக் ரூட்டன், ஜீனா யோகர் ஆகிய விமானிகளுடன் கலிபோர்னியாவில் தரையிறங்கியது.

★ 1990-88% சிலொவேனிய மக்கள் யூகொஸ்லாவியாவில் இருந்து பிரிந்து செல்வதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

★ 2004-தெற்குப் பெருங்கடலில் உள்ள மக்குவாரி தீவில் 8.1 அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

★ 2005-அசர்பைஜான் விமானம் புறப்பட்டு சில நிமிடங்களில் பக்கூ நகரில் விழ்ந்து நொருங்கியதில் 23 பேர் உயிரிழந்தனர்.

★ 2005-சாட் சூடானுடன் போரை அறிவித்தது.

### பிறப்புக்கள்


★ 1807-அந்தோனி மரிய கிளாரட், ஸ்பானிய ரோமன் கத்தோலிக்க மறைப்போதகர் (இ.1870)

★ 1902-சரண் சிங், இந்தியக் குடியரசின் 7 ஆவது பிரதமர் (இ.1987)

### இறப்புக்கள்

★ 1907-பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (பி.1824)

★ 1972-அந்திரே தூப்பொலியெவ், சோவியத் விமான வடிவமைப்பாளர் (பி.1888)



★ 2004-இந்தியாவின் 9 ஆவது பிரதமரான பி.வி.நரசிம்மராவினுடைய நினைவு தினம். (பி.1921)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2011-14.01.2012




**மூலம், பூராடம், உத்தராடம், 1-ஆம் பாதம்**

**விருந்தினரை வியக்கும் விதம் உபசரிக்கும் தனுசு இராசி நேயர்களே!**

பெருந்திரளாக உங்களைச் சுற்றி ஓர் கூட்டமே இருக்கும். காரணம் சிக்கல்களை தீர்க்க நீங்கள் முன் வருவதால்தான். பாச உணர்வு உங்களுக்கு அதிகம் உண்டு. பழகுபவர்களுக்கு உங்களை விட்டுப் பிரிய மனம் வராது. சுறுசுறுப்பு உங்கள் உடம்பில் குடி கொண்டிருக்கும். சுலபமாக வெற்றியடையும் ஆற்றலும் உங்களுக்கு உண்டு. ஆன்மீகத்தில் அதிக ஆர்வம் காட்டுபவர்கள் நீங்கள்.

• உங்களுக்கு இந்த மார்கழி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் குழப்பங்களிலிருந்து விடுபடுவீர்கள். சூரிய-சுக்கிர சேர்க்கையோடு மாதம் பிறப்பதால் அரசியல் செல்வாக்கு மேலோங்கும் அருகில் இருப்பவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்புச் செய்வார்கள். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்போது நடைபெறும்.

இனி பதினோராமிடத்தில் சனி சஞ்சரிக்கப் போவதால் பணவரவு அதிகரிக்கும். வாங்கல், கொடுக்கல்கள் ஒழுங்காகும். பற்றாக் குறை தீர்ந்து உற்றார், உறவினரின் ஒத்துழைப்போடு ஒப்பற்ற நற்பலன்களைக் காணப்போகிறீர்கள். விரக்தியின் விளிம்பில் நின்றவர்களுக்கு எல்லாம் இனி விடிவு காலம் வந்துவிட்டது. குரு, சனி இரண்டின் ஆதிக்கங்களும் உங்களுக்கு நன்மையை வழங்க, அதற்கு உரிய பரிகாரங்களைச் செய்வதோடு ஹோமங்களையும் வைப்பது நல்லது.

டிசம்பர் 17 ஆம் திகதி மகர இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 6, 12 க்கு அதிபதி 2 இல் சஞ்சரிக்கும் போது உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி வந்து சேரும். செய்யும் பணி நிரந்தரம் ஆகவில்லையே என்ற கவலை மாறும். புனித பயணங்களை மேற்கொள்வீர்கள். கடன் சுமை குறையும். வெளிநாட்டு முயற்சிகளிலும் ஒரு சிலருக்கு வெற்றி கிடைக்கும். அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் இன்பம் வழங்கும்.

உங்கள் இராசிக்கு 2,3க்கு அதிபதியான சனிபகவான் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதியாகவும் சகாய ஸ்தானாதிபதியாகவும் விழங்கும் சனிபகவான் 11-ல் சஞ்சரிக்கும் போது, நினைக்க இயலாத இராஜ யோகம் உருவாகும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். ஆனால் சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் உடல் ஆரோக்கியத்தில் மட்டும் ஒவ்வொரு நிமிடமும் கவலை வந்துகொண்டே இருக்கும். வைத்தியத்தோடு, வழிபாடும் இணைந்து செய்தால்தான் ஆரோக்கியம் மேம்படும்.

ஜனவரி 1 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே புதன் சஞ்சரிக்கப் போகிறார். ஜனவரி 10 ஆம் திகதி கும்பத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். இரண்டு பெயர்ச்சிகளுமே உங்கள் எதிர்பார்ப்புக்களை நிறை வேற்றும். பயணங்களால் பலன் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்பு மாறும், பூமி வாங்க, விற்க எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். கும்ப சுக்கிரனின் சஞ்சாரத்தால் உடன்பிறப்புக்களின் இல்லங்களில் நடைபெறும் சுப காரியங்களை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விவரும்பி வந்து சேரலாம். இம்மாதம் வியாழன் தோறும் குரு தட்சணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

இம்மாதம எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும். இல்லத்தில் விருந்தினர் வருகை அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் பாசம் கூடும். நேசம் பொங்கும். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு. சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், உடல் நிலை தொல்லைகள் திடீரென உருவாகலாம். முழுமையாக குணமாகியிருந்த நோய் மீண்டும் தலையெடுக்கும்.குழந்தைகளின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். உங்கள் பெயரிலேயே புதிய ஒப்பந்தங்கள் அமையலாம். குருவழிபாட்டால், குதூகலம் காணலாம்.

சிவல்புரி சிங்காரம்

**உத்திராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 பாதங்கள்**

**எந்த நேரத்தில், எந்தக்காரியத்தைச் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருக்கும் மகர இராசி நேயர்களே!**

நிர்வாகத் திறமை மிக்கவர்களாக விளங்குவீர்கள். உழைப்பில் அதிக நம்பிக்கை வைத்திருப்பீர்கள். விஞ்ஞானத் துறையிலும், மெஞ்ஞானத் துறையிலும் அக்கறை கொண்ட நீங்கள் எதையும் வீணாக்க விரும்பமாட்டீர்கள். நமக்கும் ஒரு நேரம் வரும் என்ற நம்பிக்கை அதிகம் வைத்திருப்பீர்கள். கர்வமும், இலட்சியமும் இணைந்தே உங்களிடம் குடி கொண்டிருக்கும். சமுதாயத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்த்தை பெறவேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்களுக்கு இந்த மார்கழி மாதக் கிரகநிலைளை ஆராய்ந்து பார்க்கும் போது, அஷ்டமத்தில் செவ்வாய் பலம் பெறுவதால், ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்தும் சூழ்நிலை உருவாகலாம். திட்டமிட்ட காரியங்கள் சில திசைமாறிப் போகலாம். வெற்றித் தேவதை உங்களை வந்தடைய விழிப்புணர்ச்சி தேவை. அதோடு வழிபாடும் மிகவும் தேவை. குருவின் பார்வை செவ்வாயை பார்த்தாலும், அர்த்தாஷ்டம குருவாக இருப்பதால் குடும்ப உறுப்பினர்களில் யாரேனும் ஒருவருக்கு ஆரோக்கியத் தொல்லைகளும், அதனால் வேலைகளும் உருவாகலாம். சனிப்பெயர்ச்சி உங்களுக்கு சாதமாகவே இருக்கிறது. குறிப்பாக 10-ல் சஞ்சரிக்கும் சனி பலவிதங்களிலும் நன்மைகளை வழங்குவார். தொழிலில் இதுவரை ஏற்பட்ட தொல்லைகள் அகலும். தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவுவார்கள். துர்க்கை வழிபாடு உங்கள் துயரங்களைத் தீர்க்கும்.

டிசெம்பர் 17ஆம் தேதி மகர ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியிலேயே 5,10-க்கும் அதிபதியான சுக்கிரன் சஞ்சரிக்கும் போது ஒரு சில நன்மைகள் ஏற்படும். குறிப்பாக பிள்ளைகளால் வந்த தொல்லைகள் அகலும், ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிர்ஷ்ட வாய்புகள் அடியெடுத்து வைக்கும்.

டிசெம்பர் 21-ம் திகதி 10-ம் இடத்தில் சனி உச்சம் பெறுகிறார். கர்ம ஸ்தானத்தில் சனி உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல என்றாலும், தொழில் ஸ்தானமாகவும் அது வர்ணிக்கப்படுவதால் தொழில், உத்தியோகத்தில் வளர்ச்சியும், வருமானமும் அதிகரிக்கும். பெற்றோரின் உடல் நலனில் தொல்லைகள் அடிக்கடி உருவாகும். அதே நேரத்தில் அஷ்டமத்தில் செவ்வாயும் அதிக நாட்கள் இருக்க போவதால், இனம் புரியாத கவலை மேலோங்கலாம். எதையும் ஸ்திரமாக முடிவெடுக்க இயலாது. அடுத்த வர்களின் ஆலோசனைகளையே அதிகம் கேட்கும் சூழ்நிலை உருவாகும். சனிக்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் குடிப்பழக்கங்களில் இருந்து விடுபட இயலும்.




ஜனவரி முதல் திகதி தனுசு இராசியில் புதனும்,ஜனவரி 10ஆம் திகதி கும்பராசியில் சுக்கிர னும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இந்த இரண்டு பெயர்ச்சிகளும் உங்களுக்கு ஓரளவு நன்மைகளை வழங்கும் பெயர்ச்சிதான். புதனின் பெயர்ச்சிக்குப் பின்னால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். கும்ப சுக்கிரனின் ஆதிக்கத்தால் வரன்கள் வாயில் தேடி வந்துகொண்டே இருக்கும். பெண் வழிச் சிக்கல்கள் நல்ல முடிவுக்கு வரும். தொழிலில் வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். இம்மாதம் காகவாகனத்தானை சனிக்கிழமை தோறும் கைகூப்பித் தொழுவது நல்லது.

இம்மாதம் குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும். அஷ்டமத்து செவ்வாயின் ஆதிக்கத்தால் எலும்பு, நரம்பு சம்பந்தபட்ட பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவ ஆலோசனை பெறும் சூழ்நிலை உருவாகலாம். சுபகாரிய பேச்சுக்கள் வந்தாலும், குடும்ப ஸ்தானாதிபதி செவ்வாய் எட்டில் இருப்பதால். சில ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். உடன் பிறப்புக்கள் அனுசரிப்பு குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. ராகு பார்வைக்கு சர்ப்ப சாந்தி செய்வது நல்லது.

(தொடரும்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# உலகை ஆளும் அணுகுண்டு: விஞ்ஞான ரீதியான ஒரு பார்வை


1)யுரேனியம்-235 ஆனது ஒரு நியூத்திரனை உள்ளெடுப்பதன் மூலம் யுரேனியம் -236 ஆக மாறி பின்னர் இரண்டு பாரமற்ற அணுக்களையும் ($^{92}Kr$, $^{141}Ba$) மூன்று நியூத்திரன் சக்தியையும் வெளிவிடுகின்றது.

2)மேலும் வெளிவிடப்படும் ஒரு நியூத்திரனை அங்கே உள்ள மேலதிக யுரேனியம் -235 உள்ளெடுப்பதால் மீண்டும் தாக்கம் அடைகின்றது. அதன் வடிவம் மேலே சொல்லப்பட்டது போன்று தாக்கம் நடைபெறும்.

3)மேலும் அங்கே காணப்படும் யுரேனியம் -235 ஆனது நியூத்திரனுடன் தாக்கம் அடைந்து அங்கே ஓர் சங்கிலி தாக்கம் நடைபெறுகின்றதை அவதானிக்க முடியும்.

பௌதீகவியலின் அடிப்படை கோட்பாடான **கருப்பிளவு** என்ற அடிப்படையிலே முதலாவது அணுகுண்டு செயற்றிட்டமான மங்காட்டான் செயற்றிட்டம் (mangattan project)உருவாக்கப்பட்டது.

இந்த அணுகுண்டை 2 தடவை உலக மகா யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட சின்ன பையன்(little boy) பருத்த பையன் (Fatman) போன்றனவாகும்.




படம்-3 கரு இணைவு

சாதாரண இரசாயன குண்டுகள் வெடிப்பதை விட இந்த கருபிளவு மூலம் வெளிவிடப்படும் தாக்கமானது மிக பெரியது. அதாவது சின்ன பையன் வெடிப்பதால் ஏற்பட்ட இழப்பு ஆனது 15 கிலோ தொன் TNT (trin.trotoluene) வெடிப்பதால் ஏற்படும் இழப்புக்கு சமமானதாக கருதப்பட்டது. ஆனால் தற்போது கருபிளவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி செய்யப்படும் அணுகுண்டு ஆனது கிட்டத்தட்ட 4இலட்சத்து 75 ஆயிரம் தொன் TNT வெடிப்பதற்கு ஒப்பானதாகும். யோசித்து பாருங்கள் தற்போதைய அணுகுண்டு வெடித்தால் ஏற்படும் தாக்கம் எவ்வாறானதாக இருக்கும் என்று.

## கருஇணைவு தாக்கம் (Nuclear Fusion Reaction)

இரண்டு அல்லது அதற்கு கூடிய அணு கருக்களை ஒன்றிணைத்து பாரமான புதிய அணு கரு ஒன்றினை உருவாக்குவது கரு இணைப்பு (Nuclear Fusion) எனப்படும்.

கருஇணைப்பை அடிப்படையாக கொண்ட அணுகுண்டில் ஐதரசன் 2 ($^{2}H$)அல்லது துத்தேரியம் $^{2}D$ திருத்தியம் (3-T) உடன் இணைபட்டு, கீலியம்-4 ($^{4}H$) உம் நியூத்திரன் மற்றும் சக்தி வெளிவிடப்படும்.

$^{2}D + {}^{3}T \rightarrow {}^{4}He + n + 176$ mev மேலே கூறப்பட்ட இரண்டு முக்கிமான செயற்பாடுகளே அணுகுண்டின் அடிப்படை செயற்பாடுகளாகும். படம் (3)

## யுரேனியம்

யுரேனியமானது ஆவர்த்தன அட்டவணையில் பிற்பகுதியில் உள்ள அணு எண் கூடிய மூலகம் ஆகும். இந்த யுரேனியம் ஆனது இரண்டு சமதானிகளை கொண்டது.அதாவது ஒரே அணு இரண்டு சமதானிகளை கொண்டது. அதாவது ஒரே அணு எண்ணையும் வேறுபட்ட திணிவு எண்ணையும் கொண்ட மூலகம் **சமதானி மூலகங்கள்** எனப்படும்.யுரேனித்தை பார்த்தீர்கள். ஆனால் யுரேனியம்($^{238}_{92}U$)மற்றும் யுரேனியம் ($^{235}_{92}U$) என்ற இரண்டு மூலகங்கள் காணப்படுகின்றன. இவையே யுரேனியத்தின் சமதானி மூலகங்கள் ஆகும்.

**படம்1-யுரேனியம் மூலகம்**

அணு குண்டு தயாரிப்பிற்கு மிக முக்கியமான மூலமாக யுரேனியம் தொழிற்படுகின்றது.


இதில் இந்த சமதானி மூலகத்தில் யுரேனியம் -235 இன் பங்கே மிக முக்கியமான இடத்தை பிடிக்கின்றது.

ஆனால் யுரேனியம்-235 ஆனது ஒரு போதும் தனித்து காணப்படாது. (அதாவது தூய நிலையில்) அது யுரேனியம்-238 உடன் இணைந்தே காணப்படும். ஆனால் இந்த பிரித்தெடுப்பானது இலகுவான ஒன்றல்ல. ஏனென்றால் சாதாரணமாக யுரேனியத்தை எடுத்துக்கொண்டால் 99.3% யுரேனியம்-238 ஆகவும் மீதியே யுரேனியம்-235 ஆகவும் காணப்படும். எனவே இந்த பிரித்தெடுப்புக்கு அதிகளவு முதலீடு தேவைப்படும்.

அணுகுண்டு தயாரிப்பதற்கு யுரேனியம்-235ஐ 80% ஆகவும் யுரேனியம் -238 ஆனது 20% ஆகவும் பயன் படுத்தப்படுகின்றது.

யுரேனியத்தின் அணுவாழ்வுக்காலம் 704 மில்லியன் வருடங்கள் ஆகும்.

இந்த யுரேனியம் -238 ஆனது ஏன் பயன்படுத்தப்படுகின்றது என்றால் யுரேனியம்-235 நியூத்திரனை உள் எடுப்பதால் கருப்பிளவுத்தாக்கம் நடைபெறும். அதனால் அங்கு நியூத்திரனும் வெளிவிடப்படும். இங்கு வெளிவிடப்படும் நியூத்திரன்களை யுரேனியம்-238 ஆனது உள்ளெடுப்பதால் அங்கே நியூத்திரன்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது. எனவே நடைபெறும் சங்கிலித் தாக்கம் கட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றது. ஆனால் இந்த கட்டுப்பாடு செயற்பட பல காலம் ஆகலாம்.




படம்1-யுரேனியம் மூலகம்

யுரேனியத்திலிருந்து யுரேனியம்-235, யுரேனியம்-238 ஆகியவை,

1.மின்காந்தப் பிரித்தெடுப்பு (Electro Magnetic Seperation)

2.வாயு பரம்பல் முறை (Gaseous diffusion)

எனும் இரண்டு முறைகளில் பிரித்தெடுக்கப்படுகின்றது.

யுரேனியம் -238 ஆனது சங்கிலி தாக்கத்தை கட்டுப்படுத்துவதாகவும் நியூத்திரனை உள்எடுப்பதால் புளுட்டோனியம்-239 ஆகவும் அணு குண்டுகளில் பயன்படும்.

**சு.அரிகரன்**
செய்முறை வழிகாட்டுநர்
பௌதீகவியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## அணு ஆயுத வடிவமைப்பு (Nuclier weapon design )

அணுஆயுதவடிவமைப்பு ஆனது பௌதீக, இரசாயன மற்றும்பொறியியலும் இணைந்தவடிவமைப்பு ஆகும். ஆனால் இந்த அணு குண்டின் பிரதான வெடிப்பு செயற்பாடும் அதனால் ஏற்படும் தாக்கங்களும் பௌதீகவியல் கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டவை.

1. தூய கரு பிளவு அணுகுண்டுகள்
2. கரு இணைவால் தூண்டப்படும் கருப்பிளவு அணுகுண்டுகள்.
3. இரண்டு படிமுறை வெப்ப அணு குண்டுகள்.

என மூன்று முறைகளின் அடிப்படையில் வெடிப்பு சக்தியினை வழங்கும் தொழில்நுட்பமாக அணு கருப்பிளவு தாக்கமும் காணப்படுகின்றது. (தொடரும்)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 56

**படத்தில் காட்டியவாறு குழாயில் நீர் தொடரறா வேகத்தில் பாய்கின்றது. V,Vo இடையேயான தொடர்பு யாது?**




விடைகளை 02.01.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

**சி. கேதீஸ்வரன்**
(ஆசிரியர்-யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A)
நூலகம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 55 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
சரியான விடை வெல்லப்படவில்லை

**புதிர் 55 இற்கான கேள்வியும் விடையும்:**
**கேள்வி:-A,B,C,D எனும் உருக்களை மேற்படி மாற்றீடு செய்யும் போது, கனவளவின் மாற்றம் யாது? அளவீடு cm இல் உள்ளன.**
**விடை:-1 $cm^3$**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 56**
சரியான விடை:-..........
முழுப்பெயர்:-..........
முகவரி:-..........
தொ.பே. இல:..........
கையொப்பம்:..........

# மக்கள் இன்று எல்லா விடயங்களுக்கும் அரசியல்வாதிகளின் பின்னே செல்ல வேண்டியநிலை

## ஐ.தே.க.எம்.பி.ரங்கே பண்டார சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீரழிந்து விட்டன. கடந்த 3 மாதத்தில் 342 கடத்தல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன என்று ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார அண்மையில் நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, கடந்த 3 மாதத்தில் 342 கடத்தல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஆக, 27 விடயங்கள் மட்டுமே தீர்க்கப்பட்டுள்ளன.

அமைச்சின் அதிகாரி ஒருவர் அமைச்சர் ஒருவரது வாகனத்தில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளார். இந்தக் கடத்தலுக்கு இராணுவ ஜீப் ஒன்று பாதுகாப்பு வழங்கியுள்ளது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் கடத்தல்காரர்களுக்கும் போதைவஸ்து கடத்தல்காரர்களுக்கும் பாதுகாவலர்களாகவே இயங்குகின்றனர்.

இன்றைய அரசியல் கலாசாரத்தில் மக்கள் பலமற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். மக்கள் எல்லா விடயங்களுக்கும் அரசியல்வாதிகளின் பின்னால் செல்ல வேண்டிய நிலை. ஒரு பிள்ளையை பாடசாலையில் சேர்க்கக்கூட அரசியல்வாதிகளின் அனுசரணை தேவைப்படுகிறது.

மணல் ஏற்றிச் செல்லவும் பஸ்பாதை (ரூட்) பெறவும் பத்து இலட்சம் ரூபா வழங்க வேண்டும். இலஞ்ச ஊழல் நாட்டில் தலைவிரித்தாடுகிறது. வடபகுதியில் இன்னமும் சிவில் நிர்வாகம் இல்லை. இராணுவக்கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

உங்களால் அமைக்கப்பட்டுள்ள நல்லிணக்க ஆணைக்குழு வடபகுதியில் இடம்பெற்ற கடத்தல்கள் மற்றும் கப்பம் கோரல் சம்பவங்களில் கட்சியொன்றுக்கு தொடர்பு இருப்பதாகவும் இது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது. இவ்விடயத்தையும் அவதானிக்க வேண்டும் என்றார். (அ-2)

# சந்தேக நபருக்கு விளக்கமறியல்

மனநலம் குன்றிய யுவதியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கண்டி, கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிலிமத்தலாவ பகுதியில் மனநலம் குன்றிய 25 வயதுடைய யுவதியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை பேராதனைப் பொலிஸார் கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ-2)

# பெண்ணை துஷ்பிரயோகம் செய்த இராணுவ லெப்டினட் கைது

## பேருவளையில் சம்பவம்

(காலி)

தென்னிலங்கையின் பேருவளை பிரதேசத்தில் பெண் ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தித் தப்பிச் செல்ல முயற்சித்த இராணுவ லெப்டினட் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் அதிகாலை காலியில் இருந்து கொழும்பை நோக்கி வந்து கொண்டிருந்த போது பேருவளை பகுதியில் வீடொன்றுக்குள் நுழைந்து வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணை அச்சுறுத்தி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

24 வயதான இராணுவ லெப்டினட் ஒருவரே பேருவளையைச் சேர்ந்த 33 வயதான குடும்பப் பெண்ணை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண்ணின் கதறலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொது மக்களையும் பொலிஸாரையும் கண்ட சந்தேக நபர் கடலில் பாய்ந்து தப்பிச் செல்ல முயற்சித்த வேளை படகொன்றின் உதவியுடன் அவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

# கோத்தபாயவின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்திய இராணுவ அதிகாரி மீது விசாரணை

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக அதாவது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மீது போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்திய முன்னாள் இராணுவ உயரதிகாரி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேஜர் ஜெனரல் தரத்தில் பதவி வகித்த குறித்த இராணுவ அதிகாரி சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் இலங்கைப் படையினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக வெளிநாட்டில் பிரசாரம் செய்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த அதிகாரிக்கு அமெரிக்கா புகலிடம் வழங்கியுள்ளது. எனினும் 58 ஆம் படைப்பிரிவைச் சேர்ந்த எந்தவொரு உயரதிகாரியும் அமெரிக்காவிற்கு தப்பிச் செல்லவில்லை என்று ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

போர் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் போலி இராணுவ உத்தியோகத்தர்கள் தோன்றி பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு குற்றம் சுமத்தும் எவரும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை எனவும் இதனால் இந்தக் குற்றச்சாட்டுக்களின் நம்பகத்தன்மை இல்லாது போயுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த அதிகாரி அமெரிக்காவில் இருந்து கொண்டு லண்டனில் இருந்து வெளிவரும் தரெலிகிராப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் முள்ளிவாய்க்காலில் சரணடைய வந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை கோத்தபாயவின் உத்தரவின் பேரிலேயே படையினர் சுட்டுக்கொன்றதாக தகவல் வெளியிட்டிருந்தார். (அ-2)

# கிளர்ச்சியாளர்களை ஒடுக்க கட்சித்தலைமை முயற்சிக்கின்றது

## ஐ.தே.க.எம்.பி.ரோஹண கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு கட்சித் தலைமை முயற்சி செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் ரோஹண கமகே தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகம் சிறிகொத்த மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பான விசாரணைகள் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய தலைமைத்துவத்திற்கு ஆதரவு அளிக்காதவர்களை பழிவாங்கும் நோக்கில் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கட்சித் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களை பொலிஸார் தடுத்து நிறுத்தத் தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதேவேளை, கட்சித் தலைமையகம் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் குறித்த வீடியோ காட்சிகள் மூலம் குற்றவாளிகளை அடையாளம் காண முடியும். தாக்குதல் நடத்திய உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# அமெரிக்காவின் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து த.தே.கூவின் நிலைப்பாடு என்ன?

(கொழும்பு)

அமெரிக்காவின் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை வெளியிடுமாறு அரசாங்கம் கோரியுள்ளது.

அமெரிக்காவில் கைது செய்யப்படும் பயங்கரவாத சந்தேக நபர்களை வழக்குத் தொடராமல் கால வரையறையின்றி தடுத்து வைக்கக்கூடிய வகையில் அந்நாட்டில் சட்ட திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தப்பட வேண்டும். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.


புதிய சட்டத்தின் மூலம் கைது செய்யப்படும் பயங்கரவாத சந்தேக நபர்களை மிகவும் மோசமான சிறைச்சாலைகளில் ஒன்றாகக் கருதப்படும் குவந்தனாமோ சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் புதிய பயங்கரவாத தடைச் சட்டம் குறித்து சுமந்திரனின் நிலைப்பாடு என்ன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் உச்சளவில் காணப்பட்ட காலத்தில் கூட அமெரிக்க சட்டத்தைப்போன்று கடுமையான சட்டங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்படவில்லை என சஜின்வாஸ் தெரிவித்துள்ளார்.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் எனத் தெரிவித்து அமெரிக்கா தனது படைப்பலத்தை அதிகரிக்கும் அதேவேளை, இலங்கையில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை குறைக்குமாறு கோருவது நியாயமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)



மாணவர்களின் உடல் உள நலன்களை விருத்தி செய்யும் நோக்குடன் கண்காட்சியொன்று தும்பளை யோகசாந்தி நிலையத்தினால் யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது யோகாசன ஆசிரியர் தே.தேவராஜேந்திரன் மாணவி ஒருவருக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் பாடசாலை அதிபர் மு.கதிர்காமலிங்கம், யோகாசனப் பயிற்சிகளை செய்து காண்பித்த எஸ்.நேசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# கூடலூரில் முற்றுகைப் போராட்டம்; பொலிஸ் கண்ணீர்ப்புகை குண்டுவீச்சு



(கூடலூர்)

கூடலூர் பகுதியில் நடந்த முற்றுகை போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதனால் பொலிஸார் தடியடி நடத்தியும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் வன்முறையில் ஈடுபட்டவர்களை கலைத்தனர்.

**முற்றுகை போராட்டம்**

கேரள அரசை கண்டித்து தமிழ் நாட்டில் இருந்து அந்த மாநிலத்துக்கு செல்லும் 13 மலை வீதிகளில் நேற்று முன்தினம் பொருளாதார முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்று ம.தி.மு.க. மற்றும் உலகத் தமிழர் பேரமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் சார்பில் அறிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி நேற்று முன்தினம் முற்றுகைப்போராட்டம் நடைபெற்றது.

தேனி மாவட்டத்தில் இருந்து கேரள மாநிலம் செல்லும் போடி மெட்டு, கம்பம் மெட்டு ,குமுளி மலை வீதி பகுதிகளில் முற்றுகை போராட்டம் நடத்துவதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் திரண்டு வந்தனர்.

முன்னெச்சரிக்கையாக கூடலூர் பெற்றோல் நிலையம் அருகே ஏராளமான பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டு இருந்தனர். அப்போது ஒரு டிராக்டரில் வந்தவர்கள் இந்த டிராக்டரை பொலிஸ் வாகனத்தின் மீது மோத விட்டனர்.

**கல்வீச்சு**

ஆங்காங்கே இருந்து திரண்டுவந்தவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினார்கள். சுமார் 50 ஆயிரம் பேர் திரண்டு முன்னேறிச் செல்ல முயன்றனர். இதைத்தொடர்ந்து, பொலிஸ் படையினர் அவர்களை தடுத்து நிறுத்தினார்கள் இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. அப்போது திடீரென்று சிலர் கல்வீச்சில் ஈடுபட்டனர்.

**பொலிஸ் தடியடி**

நிலைமை மோசமானதால் பொலிஸார் தடியடி நடத்தினார்கள். இதனால் கூட்டத்தினர் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். அப்போது சிலர் ஒரு·பொலிஸ் வாகனத்தை தள்ளி தலைகீழாக கவிழ்த்தனர்.

**கண்ணீர்ப்புகை வீச்சு**

கல்வீச்சில் ஈடுபட்டவர்களை கலைக்க பொலிஸார் தடியடி நடத்தினார்கள். நிலைமை கட்டுக்குள் அடங்காமல் போகவே பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடித்தனர். 10 முறை கண்ணீர் புகைக்குண்டு வெடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மறியல் செய்தவர்கள் கலைந்து ஓடினார்கள். இதில் 10 பேர் காயமடைந்தனர். இதை பார்த்ததும் வீட்டில் இருந்த சில பெண்கள் மிளகாய் பொடிகளை எடுத்து வந்து பொலிஸார் மீது வீசினார்கள். (அ-2)

# சி.பி.ஐயின் மூன்றாவது குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றிருப்பவர்கள் ஆஜராக வேண்டும்

## நீதிமன்றம் அழைப்பாணை

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் சி.பி.ஐ.தாக்கல் செய்துள்ள 3 ஆவது குற்றப்பத்திரிகையில் இடம் பெற்றிருப்பவர்கள் ஆஜராக வேண்டும் என்று டில்லி சி.பி.ஐ.நீதிமன்றம் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

இந்திய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு ரூ 1.80 இலட்சம் கோடி 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து முன்னாள் மத்திய தொலைத் தொடர்பு துறை அமைச்சர் ஆ.ராசா, அவரது தனிச்செயலாளராக சித்தார்த்த பெகுரா மற்றும் தி.மு.க. தலைவர் கனிமொழி உட்பட 16 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு டில்லியில் உள்ள திகார் சிறையில் அடைக்கப்பட்டு அவர்களில் ஆ.ராசா, பெகுரா தவிர கனிமொழி உட்பட 11 பேர் பிணையில் வெளிவந்துள்ளனர்.

இந்த நிலையில் 2 ஜி ஸ்பெக்ட்ரம் ஊழலில் தொடர்புள்ளவர்கள் மற்றும் கம்பனிகளின் பெயர்கள் அடங்கிய 3 ஆவது குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ.கடந்த 12 ஆம் திகதி அதே நீதிமன்றில் தாக்கல் செய்தது. இதனையொட்டி 3 ஆவது குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றுள்ள எஸ்ஸார் குரூப் புரமோட்டர்ஸ் அன்சுமன், ரவி ரூயா, இயக்குநர் விகாஸ் சரப், லூப் டெலகாம் புரமோட்டர்ஸ் கிரன் ஹைதான், அவருடைய கணவர் ஐ.பி. ஹதான் ஆகியோரும் எதிர்வரும் ஜனவரி 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று சி.பி.ஐ.நீதிமன்றம் சிறப்பு நீதிபதி சைனி நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

மேலும் லூப் டெலகாம் பிரைவேட் லிமிட்டெட், லூப் மொபைல் இந்தியா லிமிடெட், எஸ்ஸார் டெலி ஆகிய கம்பனிகளும் 3 ஆவது குற்றப்பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் இந்திய குற்றவியல் சட்டம் கிரிமினல் சதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-2)

## பாரதச் செய்திகள்

# பாராளுமன்ற அமர்வுகள் சுமுகமாக நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - மன்மோகன்



(புதுடில்லி)

பாராளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக நடக்க அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

கேரள முன்னாள் முதல்வர் மறைந்த கருணாகரன் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தியாவின் சிறந்த நிர்வாகி விருது நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இந்த விருதை வழங்கி வைத்து பிரதமர் மன்மோகன் சிங் உரையாற்றுகையில், முயற்சி மேற்கொண்டாலும் பாராளுமன்ற நடவடிக்கைகள் சுமுகமாக அமையவில்லை. நம் முன்னோர்கள் கண்ட கனவுப்படி இதனை சுமுகமாக நடத்த அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். பாராளுமன்றத்தை சுமுகமாக நடத்துவது அரசின் வேலை மட்டுமல்ல. அனைத்து கட்சி உறுப்பினர்களின் கடமையும் கூட .எந்த ஒரு முக்கியமான விடயமாக இருந்தாலும் பிரணாப்புடன் கலந்தாலோசிப்பேன். அரசை சுமுகமாக நடத்த பேருதவி செய்பவர் பிரணாப். இந்த விவகாரம் குறித்த அறிவில் அவரை மிஞ்ச ஆள் இல்லை என்றார். (அ-2)

# லோக்பால் மசோதாவில் சி.பி.ஐ. இடம்பெறாமல் இருப்பது ஏன்?

## கிரண்பேடி கடும் கண்டனம்



(புதுடில்லி)

லோக்பால் வரம்பிற்குள் சி.பி.ஐ.யை சேர்க்காததற்கு அன்னா ஹசாரே குழுவைச் சேர்ந்த கிரண் பேடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஊழலுக்கு எதிரான லோக்பால் மசோதா கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதாக இருந்தது. ஆனால், சில திருத்தங்கள் செய்யப்பட்டு நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், நேற்றும் இந்த மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மத்திய அமைச்சரவையின் இறுதி வடிவத்திற்கு பின் இப்போது இந்த மசோதா நேற்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். திருத்தம் செய்யப்பட்டுள்ள இந்த புதிய மசோதாவில் லோக்பால் வரம்பிற்குள் மத்திய புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ. சேர்க்கப்படவில்லை. இதற்கு அன்னா ஹசாரே குழுவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், அரசியல் கட்சிகளின் கடந்த கால ஊழல்களை மூடி மறைப்பதற்காகவே இந்த நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் சி.பி.ஐ. தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அரசியல் கட்சிகளின் கடந்தகால ஊழல்களை மூடி மறைத்தது போல இப்போது சி.பி.ஐ.யை பாதுகாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அதற்காகவே லோக்பால் வரம்பிற்குள் சி.பி.ஐ. சேர்க்கப்படவில்லை.

அரசு கட்டுப்பாட்டில் இருந்து சி.பி.ஐ.யை வெளியேற்றுவதற்கு பாரதிய ஜனதா கட்சி உதவ வேண்டும் என்று லோக்சபை எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மாசுவராஜையும் ராஜ்யசபை எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜேட்லியையும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். எந்த புலனாய்வு அமைப்பும் இல்லாத ஒரு புலனாய்வு குழு அமைக்கப்படுவதை நீங்கள் எங்கும் கேட்டதுண்டா? இந்த லோக்பால் மசோதாவை நிறைவேற்றவே தேவையில்லை. யாரை யார் முட்டாளாக்குவது? என்றும் அவர் காட்டமாக கருத்து தெரிவித்துள்ளார். (அ-2)



திருச்சி அருகே பழூர் காசிவிஸ்வநாதர் கோயில் நவக்கிரக ஸ்தலத்தில் சனிப் பெயர்ச்சியை முன்னிட்டு சனி பகவானுக்கு அபிஷேகம் நடந்தது. 1. திரவிய பொடி, 2. பால் அபிஷேகம், 3. தயிர் அபிஷேகம், 4. தேன் அபிஷேகம், 5. சந்தன அபிஷேகம்

# லோக்பால் மசோதா குறித்து விவாதிக்க சோனியாவை அழைக்கிறார் ஹசாரே




(ராலேகான் சித்தி)

இன்று மத்திய அரசு தாக்கல் செய்யவுள்ள மசோதா உறுதியானது என்று கூறும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை மசோதா தொடர்பாக விவாதம் செய்ய வருமாறு ஹசாரே சவால் விடுத்துள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் சி.பி.ஐ. உள்ளடக்காத லோக்பால் மசோதா பயனற்றது என்றும் மத்திய அரசு தாக்கல் செய்யவுள்ள லோக்பால் மசோதாவால் எந்தவொரு பயனும் கிடைக்கப் போவதில்லை. லோக்பால் வரம்பிற்குள் சி.பி.ஐ. நிச்சயமாக கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் அவரும் அவரது குழுவினரும் உறுதியாக இருப்பதாக கூறினார்.

மேலும் அவ்வாறு இல்லாத மசோதாவை தாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. உண்ணாவிரதப் போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறும். மத்திய அரசு தாக்கல் செய்யவுள்ள லோக்பால் மசோதா வலுவானது என்று காங்கிரஸ் தலைவர் சோனியா கூறியுள்ளார். அவ்வாறிருக்க அதுகுறித்த விவாதத்தில் எங்களுடன் பங்கேற்க மத்திய அரசு தயங்குவது ஏன்? அவர் சோனியாவிற்கு கேள்வி எழுப்பியுள்ளார். சோனியா இல்லத்திற்கு முன்பு போராட்டம் நடத்தப்படும் என்றும் ஹசாரே கூறியுள்ளார். (அ-2)

# தாய்லாந்து பிரதமரை சந்திக்கும் ஆங்சாங்சூகி



(யோங்கோன்)

மியன்மாருக்கு விஜயம் செய்ய வுள்ள தாய்லாந்து பிரதமரை அந் நாட்டு முக்கிய எதிர்க்கட்சித்தலை வரும், நோபல் பரிசு பெற்றவரு மான ஆங் சான் சூகி முதன்முறை யாக சந்தித்து கலந்துரையாட வுள்ளார்.

தாய்லாந்து நாட்டின் யூங்கிளிக் ஷினவந்தரா என்ற பெண் பிரதம ராக உள்ளார். மியன்மாரில் நடக்க வுள்ள மண்டல அரசியல் தலைவர் களின் இருநாட்கள் மாநாடு இடம் பெறவுள்ளது. இதில் தாய்லாந்து பிரதமர் யூங்கிளிக் ஷினவந்தரா பங்கேற்கவுள்ளார். இவரை ஆங் சான் சூகி சந்தித்து பேசவுள்ளார். இதற்கான ஏற்பாடுகளை சூகியின் ஜனநாயக தேசிய லீக் கட்சியின் மூத்த தலைவரான நெய்ப்பிடேவ் செய்துள்ளார். பிரதமராக பொறுப் பேற்ற பின் யூங்கிளிக் முதன்முறை யாக சூகியை சந்தித்துப் பேசுகி றார். (அ-2)

# உரிமை மீறல்கள் குறித்து சிறுவர்கள் முறையிடுவதற்கு புதிய சட்டம் அறிமுகம்

சிறுவர் சிறுமியர்கள் தமக்கு எதிராக நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து தாங்களே நேரடி யாக சர்வதேச அமைப்புக்களிடம் முறைப்பாடு செய்வதற்கு வழி செய் யும் ஏற்பாடு ஒன்றுக்கு ஐக்கிய நாடு கள் சபையின் பொதுச் சபை அங் கீகாரம் வழங்கியுள்ளது.

சிறார் உரிமைகள் குறித்த ஐ.நா. ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய பிரிவு ஒன்றை அங்கீகரித் ததன் மூலம் ஐ.நா. பொதுச் சபை இந்த அதிகாரங்களை சிறாருக்கு வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் தமக்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய மனித உரிமை மீறல்களான சிறார் களை விற்றல், சிறார்களை தாக்கு தல், சிறார் ஆபாசப்படங்கள் மற் றும் இவர்களைப் போர்ப்படைக்கு சேர்த்தல் ஆகியவை குறித்து சிறு வர் சிறுமியர் நேரடியாகவே சர்வ தேச அமைப்புக்களுக்கு முறையிட முடியும்.

இந்தப் புதிய சட்டத்தை அனை த்து நாடுகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐ.நா. மனித உரி மைகள் ஆணைக்குழுவிடம் தலை வர் நவநீதம்பிள்ளை கேட்டுக்கொண் டுள்ளார்.

இந்தப் புதிய சட்டத்துக்கான பிரரேணை கடந்த ஜூன் மாதத்தில் ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இத்தகைய முறைப்பாடுகள் சிறாரிடம் இருந்து நேரடியாகவே கிடைக்கும் பட்சத்தில் குறித்த குற றங்கள் சிறார் உரிமைகளுக்கான சாசனத்தை மீறுகின்றதா என்பதை ஐ.நா.வின் சிறார் உரிமைகளுக் கான குழு ஆராயும் என்றும் அதில் இருக்கக்கூடிய சிறாரை பாதிக்கக்கூடிய சிக்கலான விடயங் களை அது கவனமாக கையாளும் என்றும் அதன்மூலம் அவர்க ளுக்கு உரிய பாதுகாப்பை வழங்க அது நடவடிக்கை எடுக்கும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் கூறியுள்ளார்.

இத்தகைய முறைப்பாடுகளை விசாரிக்கும் அதேவேளையில் அந் தக் காலகட்டத்தில் அந்த சிறுவ னுக்கோ அல்லது சிறுமிக்கோ திரு த்த முடியாத பாதிப்பு ஏதும் ஏற்படாத வகையில் இடைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு உரிய நாட்டின் அரசாங்கத்தை ஐ.நா. கேட்கும்.

இந்தப் புதிய சட்டத்தை நாடுகள் ஏற்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் அது அவற்றின் பார்வைக்கு விடப்படும். (அ-2)

# ஈராக் துணை பிரதமர் சரணடைய வேண்டும்

பயங்கரவாத அமைப்புடன் தொடர் புடையதாக குற்றம் சாட்டப்பட்டு கைது பிடியாணை பிறப்பிக்கப்பட் டுள்ள ஈராக் நாட்டு துணை பிரதமர் குர்தீஷ் பகுதியில் பதுங்கியுள்ளார்.

அவர் தானாக சரணடைய வேண் டும். அல்லது குர்தீஷ் இனத்தவர் கள் அவரை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என அந்நாட்டு பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில் ஈராக் துணை ஜனாதிபதியாக இருப்பவர் தாரிக் அல் ஹஸ்மி. இவர் மீது பயங்கர வாத அமைப்புடன் தொடர்பிருப்பதாக வும் ஈராக்கில் பல்வேறு அரசு அலுவல கங்களில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களில் அரசு ஊழியர்கள் பலர் பலியானார்கள்.

இந்த தாக்குதலுக்கு துணை ஜனாதிபதி அவரது ஆதரவாளர்க ளுக்கு தொடர்பிருப்பதும் தெரியவந்தது.

கடந்த வாரம் 5 நீதிபதிகள் கொண்ட நீதித்துறை குழு கைது பிடியாணை பிறப்பித்தது. தற்போது ஹஸ்மி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்.

இந்நிலையில் பிரதமர் நௌரி அல் மாலிக் விடுத்துள்ள செய்தியில்,

இவர் தானாக சரணடைய வேண் டும். முன்பு சதாம் உசேன் பிடிபட்ட போது விசாரணை நியாயமாக நடந் தது. அதேபோன்றுதான் ஹஸ்மி மீதான விசாரணையும் நியாயமாக நடக்கும். ஈராக் அரசு எப்போதும் நீதித் துறையில் தலையிட்டதில்லை என்றார்.

இதற்கிடையே தன்மீதான குற் றச்சாட்டினை துணை ஜனாதிபதி தாரிக் அல்-ஹஸ்மி மறுத்துள்ளார். தற்போது உள்ள ஷியா பிரிவு அமைச் சரவையினையும் பாராளுமன்றத் தையும் புறக்கணிப்பு செய்து போராட் டம் நடத்துவதே என் நோக்கம். தவிர பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில்லை என்றார். (அ-2)

## கடாபியின் மகனுக்கு சட்டத்தரணி வேண்டும்-ஐ.நா. கோரிக்கை

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராகப் புரட்சி செய்த மக்கள் அவரை இரகசிய இடத்தில் கண்டுபிடித்து அடித்து உதைத்ததோடு சுட்டுக் கொன்றனர். கடாபியின் மகன் சையத் அல் இஸ்லாம் உயிருடன் பிடிபட்டு லிபியாவில் உள்ள ஜிந் தன் சிறையில் அடைக்கப்பட்டுள் ளார். அவரை ஐ.நா. மனித உரிமை கண்காணிப்புக் குழுவின் தலை வர் பிரட்ரிக் ஆபிரகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து உரை யாடியுள்ளார்.

அப்போது தனக்கு உணவு மற்றும் மருத்துவசதி தரப்படுவதாக வும் சட்டத்தரணி வைத்துக் கொள்ள அனுமதி வாங்கித்தருமாறும் அவர் கேட்டுக்கொண்டார். இதன் தொடர்ச் சியாக போர்க்குற்ற வழக்கில் கைது செய்யப்பட்ட சையத் அல் இஸ்லாமுக்கு சட்டத்தரணி வைத்துக்கொள்வதற்கு லிபிய அரசு நிர்வாகம் உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும் என ஐநா மனித உரிமை அமைப்பு கோரி க்கை விடுத்துள்ளது. (அ-2)

# பறவைக்காய்ச்சல் வைரஸை தீவிரவாதிகள் பரப்ப திட்டம்?

(வாஷிங்டன்)

பறவை காய்ச்சல் நோய் மனிதர்களுக்கு இடையே பரவுவது கிடையாது. எனினும் கடந்த 1997ஆம் ஆண்டு உலகின் பல்வேறு நாடுகளுக்கு அந்த நோய் பரவியதில் 600இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த நிலையில் பறவைக்காய்ச்சல் வைரஸ் (எச்5என்1) மூலமாக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

எனவே பறவை காய்ச்சல் தொடர்பான புதிய ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் விபரங்கள் எதையும் வெளியிட வேண்டாம். அவ்வப்போது வெளியாகும் அவற்றை பிரதி எடுத்து புதிய ஆய்வுகளை தீவிரவாதிகள் மேற்கொள்ளக் கூடும் என அமெரிக்காவைச் சேர்ந்த முக்கிய அறிவியல் ஆய்வுப் பத்திரிகைகளுக்கு அமெரிக்க அரசு தடை விதித்துள்ளது.


இதற்கிடையே ஹொங்கொங்கில் பறவை காய்ச்சல் நோய் பரவி வரு கிறது. ஹொங்கொங் நகரில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் இறந்த கோழியின் உடலில் எச்5என்1 வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது. எனவே, கோழிப்பண்ணையில் உள்ள 17 ஆயிரம் கோழிகளை அழிக்க அரசு உத்தரவிட்டது. மேலும் சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து கோழிகளை இறக்குமதி செய்யவும் தடை விதித்தது. (அ-2)






துருக்கி அங்காராவில் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு முன்பு துருக்கி பிரதமர் தாயிப் எரிடேஜனை (வலது) பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாசை சந்தித்தார்.

# பூமியை ஒத்தகோள் கண்டுபிடிப்பு




அண்மையில் பூமியை ஒத்த கோளொன்று கண்டு பிடிக்கப்பட்டமை பல ருக்கும் தெரிந்திருக் கும். இது தோற்றத் தில் அச்சு அசலாக பூமியை ஒத்திருக்கின்றது. விசேடமாக தயாரிக்கப்பட்ட தொலைநோக்கி மூலம் சுமார் 600 ஒளியாண்டுகளுக்கு அப்பாலிருந்த இந்தக் கோள் தொடர்பான படங்களை நாசா வெளியிட்டுள்ளது.

அது *Kepler-20f* என அழைக்கப்படுகின்றது. *Kepler-20f* இனது மேற்பரப்பு மனித வாழ்க்கைக்கு ஏற்றதா என்ற ஆய்வு இன்னமும் நடைபெற்று வருகின்றது. பரப்பளவில் பூமியைவிட சற்று சிறியது. ஆனாலும் வெப்பநிலை பூமியை விட அதிகம். இதன் சுற்றல் காலமும் பூமியை ஒத்திருப்பது வானியலாளர்களுக்கு இதன் மேல் கொண்ட ஆர்வத்தை மேலும் அதிகரித்திருக்கின்றது. (அ-2)

# ஈராக் தலைவர்கள் பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகாண வேண்டும்- பான் கீ மூன்

ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறியுள்ள நிலை யில் ஈராக் அரசியல் தலைவர்கள் தங்கள் நாட்டு பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

ஈராக் மீது படையெடுத்த அமெ ரிக்கா, அந்நாட்டை தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவந்தது. சுமார் 8 ஆண்டுகள் ஈராக்கில் இருந்த அமெரிக்கப் படைகள் கடந்த மாதம் முதல் வாபஸ் பெறப்பட்டு வந்தது. ஈராக்கில் இருந்தகடைசி அமெரிக்கப் படை பிரிவும் கூட இம்மாதம் கடந்த சிலநாட்களுக்குமுன்பு ஈராக்கை விட்டு வெளியேறியது. இப்போது ஈராக் முழுக்க முழுக்க அந்நாட்டு தலைவர் களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்த நிலையில் ஈராக் அரசி யல் தலைவர்களுக்கு பான் கீ மூன் ஒரு வேண்டுகோளை விடுத்துள் ளார். இப்பிரச்சினைக்கு அந்நாட் டில் உள்ள அரசியல் கட்சித் தலை வர்கள் பேச்சுவார்த்தை நடத்தி அதன் மூலம் தீர்வு காண முன் வர வேண் டும் என்று அவர் கேட்டுள்ளார். ஈராக் கின் அண்மைய வரலாற்றில் இது ஒரு புதிய திருப்பமாக அமைந்துள்ளது.

சிறந்த ஒரு எதிர்காலத்திற்கு வழி வகுக்கும் வகையில் ஈராக் மக்க ளுக்கும் உலக மக்களுக்கும் ஒரு நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் ஈராக் தலைவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்துள் ளது என்றும் அவர் ஒரு அறிக்கை யில் கூறியுள்ளார்.



ஈராக் தலைவர்கள் தங்களது கருத்து வேறுபாடுகளை தீர்க்க ஒரு வருக்கொருவர் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈராக்கில் இரசாயன உயிர் கொல்லி ஆயுதங்கள் உள்ளதாக குற்றம் சாட்டி அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ் காலத்தில் ஈராக் மீது அமெரிக்க படைகள் தாக்குதலை தொடுத்தன. ஆனால் அங்கு அத்தகைய கருவி கள் எதுவும்கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

நெல் முற்றமுற்ற தலை சாய்க்கிறது.
தலைசாய்க்க மறுக்கும் மரம் அடியோடு சாய்கிறது.
- அறிஞர் அண்ணாதுரை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# புல்லுக்கு வெளி வைரம் மரத்திற்கு உள் வைரம்

புல்லுக்கும் மரத்துக்கும் வித்தியாசம் என்ன? இப்படி ஆசிரியர் ஒருவர் மாணவர்களைக் கேட்டார்.

மாணவர்கள் பதில் கூறுவதில் இடர்ப்பட்டனர். புல்லுக்கு வெளி வைரம்.மரத்திற்கு உள் வைரம் என்றார் ஆசிரியர்.

சேர் விளங்கவில்லை என்றனர் மாணவர்கள்.

பனை,தென்னை, கமுகு இவை புல்லினம். இவற்றுக்கு வெளிப் பகுதியில் மட்டுமே வைரம். உட்பகுதி சோத்தி. வேம்பு, முதிரை, பாலை இவை மரம்.

இவற்றுக்கு உட்பகுதியிலேயே வைரம். இவ்வாறு கூறிய ஆசிரியர் வீரம் என்பதும் மரத்தின் வைரம் போல இருக்க வேண்டும் என்றார்.

வீரமா அது என்ன?

வீரம் என்பதற்கு புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம். என்று ஔவைப்பிராட்டி விளக்கம் கூறுகின்றார்.

வீரம் என்பது உரத்துக் கதைப்பதிலோ அதட்டுவதிலோ இருப்பதில்லை.

மாறாக எதனையும் நிதானமாக செவிமடுப்பதிலும் அதற்குத் தீர்வு காண்பதிலுமே தங்கியுள்ளது.

அதிலும் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் மிகவும் நிதானமாகச் செயல்படுவது அவசியம்.

இப்போதெல்லாம் இலங்கை அரசு தமிழ் அரசியல் தலைமைகளை வெருட்டுவது போன்ற தோற்றப்பாடு தெரிகிறது.

ஒரு அரசு ஓர் இனத்தின் அரசியல் தலைமையை அச்சுறுத்துவதென்பது நாகரிகத்தின் பாற்பட்டதல்ல.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டமல்ல சாட்சாத் பார்வதி பரமேஸ்வரன் நேரில் வந்து பேச்சு நடத்தினாலும் தமிழ் மக்கள் தாம் எதிர்பார்த்ததற்கு குறைந்த எந்தத் தீர்வையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

குறைந்த தீர்வைத்தான் தரமுடியும் என்று அரசு நினைத்தால் அதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று தமிழர்கள் சொல்வார்கள். அப்படிச் சொல்வதுகூட மகாவீரம் என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

விடுதலைப்புலிகளின் போராட்டம் அவர்களின் முன்னெடுப்புகள் தொடர்பில் பல்வேறு வாதப்பிரதிவாதங்களை முன்வைக்க முடியும்.

அவற்றில் நியாயப்பாடுகளும் இருக்கலாம். அதற்காக தமிழ் மக்களுக்கு இன ரீதியாகப் பிரச்சினை இல்லை என்று யாரும் முடிவெடுத்து விட முடியாது.

இங்குதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணுதல் என்பது முதன்மை பெறுகின்றது.

எனினும் 30 வருடப் போருக்குப் பின்னர் இனப்பிரச்சினையிலோ அல்லது தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவதிலோ அரசு அலட்சியப் போக்கையே கொண்டுள்ளது.

கூடவே இடையிடையே தமிழ் மக்களை அதட்டவும் துணிந்து நிற்பதை நினைக்கும் போது இலங்கை மக்கள் அரசியல் தொடர்பிலும் தேர்தல் காலங்களில் வாக்களித்தல் தொடர்பிலும் அதீதமாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணத் தோன்றும்.

எதுவாயினும் தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக இழந்தவை ஏராளம். அந்த இழப்புகள் சாதாரணமானவையல்ல.

எனவே தமிழ் மக்கள் அற்பசொற்ப உரிமைகளுக்காக அடிபணிவார்கள் என்று அரசு மட்டுமல்ல அண்டை நாடுகளும் கருதலாகாது.

ஆக, எவர் அதட்டினாலும், தமிழ் மக்களின் உரிமைக்காக யார் பேச்சு நடத்துகிறார்களோ அவர்கள் மரத்தின் வைரமாக இருக்க வேண்டும். அதுவே இலட்சியத்தை வெல்வதற்கான ஒரேவழி.

# அடைமழை காரணமாக 39 ஆயிரத்து 778 பேர் பாதிப்பு

## ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில வாரங்களாக பெய்து வரும் மழை காரணமாக ஐந்து மாவட்டங்களில் 10 ஆயிரத்து 518 குடும்பங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 778 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் பலியாகியுள்ளார்.

பல தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதுடன் அப்பகுதிகளின் இயல்புநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் கொடிப்பிலிப்பு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களே இந்த சீரற்ற காலநிலையால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 19 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 406 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது,

கிளிநொச்சியில் 3 ஆயிரத்து 832 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 499 பேரும் யாழில் 3 ஆயிரத்து 494 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 381 பேரும் முல்லைத்தீவில் 3 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 95 பேரும் மன்னாரில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 729 பேரும் பொலநறுவை மாவட்டத்தில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியில் 33 தற்காலிக முகாம்களும் மன்னாரில் 7 தற்காலிக முகாம்களும் ஏனைய 3 மாவட்டங்களிலும் தலா ஒவ்வொரு முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன் அம்முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களுக்கான நிவாரண சேவைகள் அவ்வப் பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## களிமண்ணில் விநாயகர் செய்யப்படுவது ஏன்

பல்வேறு வகையான விதத்திலும், பல பொருட்களினாலும் விநாயகரை செய்வார்கள். சிலர் களிமண்ணாலும் விநாயகரை வடிப்பார்கள். விநாயகர் சதுர்த்தியைக் கொண்டாடிவிட்டு மூன்றாம் நாளிலோ அல்லது அடுத்த சதுர்த்தி தினத்தன்றோ வழிபட்ட விநாயகரை பூஜை செய்து நதியிலோ அல்லது குளத்திலோ கரைத்து விடுகின்றனர். இதில் தெய்வீக தத்துவமும் மனித வாழ்க்கைத் தத்துவமும் மறை பொருளாக உணர்த்தப்பட்டு இருக்கிறது. அதாவது ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணில் இருந்து உருவாக்கப்பட்ட விநாயகரை சில நியமங்களோடு தெய்வ நிலைக்கு உயர்த்தி பொன், பொருள், அபிஷேகம், ஆராதனைகள் செய்து, நைவேத்தியங்கள் படைத்து தியானித்து பின்னர் மீண்டும் ஐம்பூதங்களில் ஒன்றான நீரிலேயே கரைக்கின்றனர். இடையிலேயே தோன்றி இடையிலேயே மறைந்து விடுகிறது.

அதேபோல் மனிதனின் வாழ்வும் இப்புவியான மண்மீது தோன்றுகிறது.பின்னர் அவனைப்பலரும் போற்றுகின்றனர்.பொன் பொருளாலும் சுக போகங்கள் பெறுகின்றனர்.என்றாவது ஒருநாள் உடம்பு மண்ணுக்குள் போகப்போகிறது அல்லது எரிந்து சாம்பலாக நீரிலே கரையப் போகிறது.

எனவே ஞானமும்,நற்கல்வியும், நற்செயற்பாடுகளாலும் உன்னை உயர்த்திக்கொள் என்பதை உணர்த்துவதாகும் விநாயகரின் வழிபாடு. களிமண் உருவத்தத்துவம் மேலும் நற்பதவிகளும் கிடைக்கும்.புற்று மண்ணால் செய்த பிள்ளையாரை வழிபட்டால் இலாபம் கிடைக்கும்.

# ஒளி விழா

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகமும் மாவட்ட சமுர்த்தி அலுவலகமும் இணைந்து நடத்தும் ஒளி விழா நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆற்றவுள்ளார்.இதன் போது அதிவணக்கத்திற்குரிய யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என யாழ்.மாவட்டச் செயலக நலன் புரிக்கழகம் அறிவித்துள்ளது. (அ)

# கருத்தரங்கு

(கரவெட்டி)

உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. உயர்தர தமிழ்ப்பாட மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியால மண்டபத்தில் தாணாவிஸ்ணு தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக இ.இராஜேஸ்கண்ணன், சு.குனேஸ்வரன், செ.சுதர்ஷன், அ.பெலநந்தி வேல்நந்தகுமார், த.அஜந்தகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-3-24)

# வெள்ளி நற்சிந்தனை

## 51 செவ்வியல் தமிழில் சீர்மியம்



**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மறதி என்பது மனிதருக்கு ஏற்படும் ஒரு சோம்பல் நிலையெனலாம். நாள்தோறும் செய்யும் கடமையையே நாம் சிலவேளைகளில் மறந்து விடுகிறோம். கல்வி கற்கும்போது இம் மறதிக் குணத்தால் பெரும் துன்பம் அடையும் நிலை உண்டு.மனப்பதிவு ஆழமாக நடைபெறாவிட்டால் மறதி ஏற்படும்.மணிவாசகரும் இத்தகைய மறதி நிலைக்கு ஆளானதைப் பாடலிலே பதிவுசெய்து வைத்துள்ளார். உலக வாழ்க்கையில் இறைவன் பற்றிய நினைப்போடு வாழ்வது கடினம் என்பதை எல்லோரும் உணர எடுத்துக் கூறியுள்ளார்.

இத்தகைய மறதி நிலை ஏற்படும் போது இறைவனைப் பற்றி நினைப்பது நல்லது.உள்ளத்திலே ஒன்றை ஆழமாகப் பதிவு செய்யும் பயிற்சி இறைவழிபாட்டினால் ஏற்படும் என்பதை மணிவாசகர் சுட்டிக்காட்ட விரும்புகிறார். அதனால் இறைவன் பற்றிய குறிப்புகளைப் பாடலில் இணைத்துள்ளார். ஈசனே,எம்மானே, எந்தை பெருமானே, என்பிறவி நாசனே, தேசனே, அம்பலவனே என இறைவன் திருவருள் நிலையைத் தொடர்ந்து நினைக்க வழிகாட்டுகிறார். ஈசனே என்பது எல்லா உயிர்களுக்கும் எல்லாப் பொருளுக்கும் இறைவனாக இருப்பதை விளக்கி நிற்கிறது. என் அம்மானே என்பது தனக்கு அருள் செய்யுமாறு குருவடிவாய் எழுந்தருளி வந்த தலைவனான இறைவன் சிறப்பைக் கூறுகிறது. எந்தை எம் பெருமான் என்பது என் தந்தையாகிய பெரியோனே என ஒரு நெருங்கிய உறவு நிலையில் இறைவனை நினைக்கவைக்கிறது. என் பிறவி ஈசனே என்பது பிறப்பை ஒழிக்கும் அருள்நிலையை விளக்கி நிற்கிறது. தேசனே என்பது இறைவனுடைய ஞான ஒளி வடிவைக்காட்டி நிற்கிறது. அம்பலவனே என்பது ஆகாயமாக நிற்கும் இறைவனைக் காட்டுகிறது. இறைவன் இத்துணைச் சிறப்புடையவன் என்பதை நன்கு உணர்ந்திருந்தும் தான் மறந்தேனே என மணிவாசகர் வருந்துகிறார்.

நாயைப் போன்ற இழிந்த தகைமைகளையுடைய தன்னை இறைவன் வலிய வந்து ஆண்டுகொண்டதை மீண்டும் ஆழமாக நினைத்துப் பார்க்கிறார். தான் இடையிலே இறைவனை மறந்து உலக வாழ்க்கையின் வயப்பட்டதை நன்கு உணர்கிறார். மறந்து விட்டதை எண்ணிப் பார்க்கிறார். நினைக்கமாட்டேன் எனத் தனது குற்றத்தை ஒப்புக் கொள்கிறார். இவ்வாறு மறந்தமைக்காக ஏதும் செய்ய முடியாதிருப்பதையே இறைவனிடம் முறைப்பாடு செய்கிறார். தன்னை இறைவனே இனிமேல் வழிநடத்த வேண்டுதல் செய்கிறார். மணிவாசகருடைய வாழ்வியலனுபவம் மானிடருக்கு உண்டு. எனவே அவருடைய பாடலைப் படிக்கும் போது ஒரு வழிகாட்டல் நிலையையும் நன்குணர முடிகிறது. சிறப்பாக சித்தும் அசித்தும் ஆகிய பிரபஞ்சங்கள் எல்லாவற்றிற்கும் தலைவனாகிய இறைவனை மறவாமல் மனந்திருந்தி வாழ்வதே நன்று.ஒளி வடிவிலே நாம் இறைவனைக்காணலாம் என மணிவாசகர் எல்லோரையும் பக்தி வாழ் வியலுக்கு ஆற்றுப்படுத்துகிறார். எடு த்த பிறவிக்குரிய வினைகளை அநு பவித்துக் கொண்டிருக்கும் உயிர்களை எல்லாம் இறைவழிச் செல்ல மணிவாசகர் தூண்டுகிறார்.அதனைப் பாடல் நன்குணர்த்துகிறது.

ஈசனே என் எம்மானே எந்தை பெருமான் என்பிறவி
நாசனே நான் யாது மொன்றல்லாப் பொல்லா நாயான
நீசனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேசனே யம்பலவனே செய்வதொன்றும் அறியேனே.

இலங்கையின் உயர் விருதான கலாபூஷணம் விருது பெற்ற நாடகக் கலைஞர் மூத்ததம்பி தேவதாசுக்கு பாராட்டு விழா வெடியரசன் கலாமன்றத்தினால் நேற்றைய தினம் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் விழா நாயகன் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதையும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் கலைஞரை பொன்னாடைபோர்த்தி கௌரவிப்பதனையும் கலாமன்றத்தின் தலைவர் சி.பரமநாதன் பாராட்டுப் பத்திரம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

முல்லைத்தீவுகல்விவலயத்தில் கடமைநிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான விண்ணப்பங்கள் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தால் கோரப்பட்டுள்ளன.

அழகியல், விஞ்ஞானம், முறைசாராக் கல்வி ஆகிய பாடங்களுக்கே மேற்படி பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

இதற்கமைய மேற்குறிப்பிட்ட பாடங்களில் 5 வருடம் சேவையாற்றிய பட்டதாரிகள் அல்லது 7 வருடம் சேவையாற்றிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் ஆசிரிய ஆலோசகர்களும் விண்ணப்பிக்க முடியும்.

ஆசிரியர்கள் தரம்I தரம்2-I ஆகியவர்களும் விண்ணப்பிக்கலாம் எனவும் தரம்2-II ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் தரம்I தரம்2-II ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் குறைந்தபட்சத்தில் தரம்2-II ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் எனவும் வலயக்கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கல்விவலயத்தை சேர்ந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாமெனவும் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிமனைக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-29)

# ஆசிரியர் சேவையில் பதவியுயர்வு பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை பதவி உயர்விற்கு கடந்த 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் தகுதி பெற்றவர்கள் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். இதற்கமைய 3 II இலிருந்து 3 I இற்கு பதவியுயர்வு பெறுபவர்கள், 3 I இலிருந்து 2 II இற்கு பதவியுயர்வு பெறுபவர்கள், 2 II இலிருந்து 2 I இற்கு பதவியுயர்வு பெறுபவர்கள், 2 I இலிருந்து ஆசிரியர் சேவை தரம் I இற்கு பதவி உயர்வு பெறுபவர்கள் அனைவரும் விண்ணபப் படிவங்களை துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலும் மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் பாடசாலைகளுக்கு இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தை பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியுமெனவும் அல்லது துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தில் விளம்பர பலகையில் பார்வையிடலாமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-3-15)


තල් සංවර්ධන මණ්ඩලය
பனை அபிவிருத்திச் சபை
PALMYRAH DEVELOPMENT BOARD
සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

## கனரக இயந்திர இயக்குநர்- பயிலுநர் பதவி
## (Heavy Machinary Operator- Trainee)

மேற்படி பதவிக்குக் கீழ்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை :18-45 வருடங்கள்

கல்வித்தகைமை :- கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சையில் குறைந்தது 02 பாடங்களில் சித்தி

ஏனைய தகைமைகள்: "A" தர மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம்

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை 05.01.2012 இற்கு முன்னர் எமது தலைமை அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுதபால் மூலம் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச்சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டிவீதி,
யாழ்ப்பாணம். (சி-5287)



තල් සංවර්ධන මණ්ඩලය
பனை அபிவிருத்திச் சபை
PALMYRAH DEVELOPMENT BOARD
සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT

## கற்பகச்சோலை உருவாக்க வாரீர்!

**பாலைவனமாக மாறக்கூடிய நிலையில் உள்ள**
**பனைவளமுள்ள பிரதேசங்களை**
**கற்பகச் சோலை ஆக்குவதற்கு வாரீர்!**

பனை அபிவிருத்திச் சபையானது இயந்திரம் (EXCAVATOR) மூலமாக பனம் கன்றுகளை அகழ்ந்து புதிய இடங்களில் நடுகை செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

எனவே பனங்காணி உரிமையாளர்கள் தங்களிடம் உள்ள பனம் கன்றுகளை (வடலிகளை) அழிக்காது எம்முடன் தொடர்பு கொண்டு பொருத்தமான இடங்களில் வடலிகளை நடுகை செய்வதற்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி-5288)


# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் சபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டு மின் இணைப்பு, நீர்குழாய் பொருத்துதல், குளிரூட்டி திருத்துதல், தாதி உதவியாளர், கணனி கற்றை அனுமதிப்பதிரம் ஆகிய கற்கை நெறிக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக்கற்கை நெறிகளைப் பயில விரும்பும் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணபப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பங்களைபூர்த்திசெய்து தேசிய பயிலுநர் கைதொழிற் பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், ஆனந்தபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 03 43942824 அல்லது 0212285 615 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ளமுடியுமென கிளிநொச்சி தேசிய பயிலுநர் தொழிற்சபை மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (அ-2)





## நத்தார்- புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு
## மாபெரும் விலைக் கழிவு

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)

SILVER SHIELD SOCKS

பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை, சகல தரத்திலும், சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள




குறிப்பு:- பாடசாலைகளுக்கும், மொத்த வியாபாரிகளுக்கும் மேலதிக கழிவு வழங்கப்படும்.

ஸ்ரீ முருகன்



303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5392

(சி-5130)

# கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் இரு வியாபார நிலையங்களில் கொள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் நேற்று அதிகாலை கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்வம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் 2 வியாபார நிலையங்களில் பணமும் பெறுமதியான பொருட்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

அருகில் இருந்த மற்றொரு வியாபார நிலையத்திலும் கொள்ளையிட முயற்சித்த போதும் வியாபாரிகள் விழிப்படைந்ததனால் முச்சக்கர வண்டியில் வந்த சில கொள்ளையர்கள் உருத்திர பகுதியூடாக பெரிய பரந்தனுக்கு தப்பிச் சென்றதாக பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(பா-15,11)

# பரீட்சைகள் ஆணையாளராக புஷ்பகுமார நியமனம்

(கொழும்பு)

பரீட்சைகள் ஆணையாளராக டபிள்யூ.எம். ஜே.புஷ்பகுமார நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய பரீட்சைகள் ஆணையாளரான அநுர எதிரிசிங்க எதிர்வரும் 31-ம் திகதி ஓய்வு பெறவுள்ளார். அதனால் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் புதிய ஆணையாளராக டபிள்யூ.எம்.ஜே. புஸ்பகுமாரவை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (பா)

## சர்வதேச...

மிகவும் நெருங்கிய நட்பு நாடு எனவும், உள்விவகாரங்களில் சீனா உன்னிப்பாக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வல்லமை இலங்கை அரசாங்கத்திற்கும் நாட்டு மக்களுக்கும் காணப்படுவதாக சீனா நம்புகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

## புதிய ...

ஆண்டை எதிர்நோக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இனி நியாயம் வேண்டி சாத்வீக மக்கள் போராட்டங்களை ஆரம்பிக்க வேண்டியதுதான் புதிய ஆண்டு தமிழர்களுக்கு காட்டும் வழி.

காணி அதிகாரங்கள் தொடர்பிலே கடந்த கால ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. குறிப்பாக பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

வரையறைக்குட்பட்ட பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் 13ஆம் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது.

போர் நடைபெற்ற காலத்திலும், அதற்கு பின்னரும் கூட இந்தியாவிற்கு சென்ற அரசாங்க பிரதிநிதிகள் 13 ஆம் திருத்த்திற்கு அப்பால் செல்வதாக கூறிவந்தார்கள். அதையே இந்தியா தமிழர்களுக்கு கூறி வந்தது. இன்று இவை அனைத்தையும் அரசாங்கம் கைவிட்டுள்ளது.

அதேபோல் வட கிழக்கில் உள்ள அனைத்து இராணுவ முகாம்களையும் முழுமையாக தமிழ் மக்கள் அகற்றும் படி சொல்லவில்லை. கடந்த காலங்களிலும் வடக்கிலும், கிழக்கிலும் நாடு முழுக்க இருப்பதைப் போல் இராணுவ முகாம்கள் இருந்தன. இராணுவ தலைமை அதிகாரிகளாகதமிழர்கள்இருந்தார்கள். ஆனால் போர் ஆரம்பித்த பின்னர் புதிய பெருந்தொகை முகாம்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்று போர் முடிந்து விட்டது. இந் நிலையில் மேலதிகமாக உருவாக்கப்பட்ட இராணுவ முகாம்கள் அகற்றப்படுவதுதான் நியாயம்.

உலகில் எந்த ஒரு நாட்டிலும் போர் முடிந்த பின்னர் இத்தகைய முறையில் இராணுவம் வாபஸ் வாங்கப்படுவது வழமையாகும். இராணுவம் வாபஸ் வாங்கப்பட்டு காவல் நடவடிக்கைகளுக்காக அவசியமானால் பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஏனென்றால் பொலிஸ் என்பது வேறு. இராணுவம் என்பது வேறு. ஆனால் இலங்கையில் இன்றும் தமிழ் பகுதிகளில் இராணுவம் போர்க் காலத்தை போலவே நிலைகொண்டு இருக்கிறது. இப்படி இருக்கும் இராணுவம் சும்மா இருக்கவில்லை. அது சிவில் நடவடிக்கையிலும் தலையீடு செய்து வருகிறது. ஏனென்றால் இராணுவத்திற்கு சும்மா இருக்க முடியாது.

இந்த பின்னணியில் நாட்டின் தலைவர் பொலிஸ், காணி அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்க முடியாது என்றும் இராணுவ முகாம்களை வாபஸ் வாங்க முடியாது என்றும் கூறியுள்ளார். இது புதிய ஆண்டில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்த தமிழ் மக்களின் நம்பிக்கையை இந்த அறிவிப்புகள் தகர்த்துள்ளன.

போரை முடித்து வைத்து விட்டு சமாதானத்தை வாங்கித் தருகின்றோம் என தமிழ் மக்களுக்கு காப்புறுதி சான்றிதழ்கள் வழங்கிய சர்வதேச சமூகம், செயற்படுவதாக தெரியவில்லை. இந்நிலையில் நியாயம் வேண்டி தமிழ் மக்கள் சாத்வீக போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளர்கள்.

இது தான் புதிய ஆண்டு சொல்லும் செய்தி. இவ்வாறு மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## இலங்கை விவகாரத்தில்...

சாங்கத்தால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் விசனம் வெளியிட்டுள்ள நிலையில், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட நிகழ்வுகளை வரலாற்றிலிருந்து அழிப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் சிறிது பின்னடைவைக் கண்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச பொறிமுறை ஒன்றை உருவாக்குவது இந்தியாவின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இலங்கையில் தற்போது சீனா செலுத்திவரும் செல்வாக்கை அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் விரும்பவில்லை.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு சீனா மேற்கொண்டு வரும் முத்துமாலை நகர்வு கடல் மற்றும் படைத்துறை வளங்களுக்கான முக்கிய மையங்களை உருவாக்கும் நோக்கை கொண்டது என இந்தியா கருதுகிறது.

இந்நிலையில் இலங்கை விவகாரம் தொடர்பில் கடும் போக்கைக் கடைப்பிடிப்பதில் இலங்கை அரசாங்கம் சீனாவின் கைகளுக்குள் போய்விழும் நிலையையும் ஏற்படுத்தலாம்

இலங்கை மீதான சீனத் தலையீடு இந்தியாவுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ள போதிலும் சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தாமல் இவ்விவகாரத்தில் இந்தியா தனித்துச் செயற்பட முடியாது என புதுடில்லியைத் தளமாகக் கொண்டியங்கும் கொள்கை ஆய்வுக்கான மையத்தின் பேராசிரியர் செலானி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை அமைப்புக்கள் அவசியம் எனக் கருதுகின்ற வகையில் இந்தியா உறுதியுடன் செயற்படுவதற்கு இத்தகைய காரணங்கள் தடையாக உள்ளன.

போருக்குப் பின்னரான தமிழ் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்த தனது அதிருப்தியை இவ்விரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகின்றபோது இந்தியா வெளிப்படுத்தி வருவது போன்று வெளியிடப்படும் அறிக்கைகளில் இத்தகைய அதிருப்தியை வெயிடுவதை இந்தியா தவிர்த்து வருகின்றது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அரசாங்கத்தின் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு வழங்கவில்லை. இந்தியாவின் இந்நிலைப்பாடானது இலங்கை விவகாரத்தில் சீனா மற்றும் ரஸ்யா போன்ற நாடுகள் கடைப்பிடிக்கும் நிலைக்கு ஒத்ததாக உள்ளதாக அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்தியா உறுதியான அறிக்கையை வெளியிட்டால் அவ்வழியை ஆசியாவின் ஏனைய சிறிய நாடுகள் மற்றும் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளும் பின்பற்றும்.

இல்ங்கை விவகாரம் தொடர்பில் கடைப்பிடித்துவரும் மென்போக்கை கைவிட்டு இந்தியா உரத்துக் குரலெழுப்ப வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழு இலங்கை அரசாங்கம் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றே மேற்கத்தைய நாடுகள் விருப்பம் கொண்டுள்ளதை அந்நாடுகளின் நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்நிலையில், இத்தகையதொரு விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் இந்தியா இதுவரை மேற்கொள்ளவில்லை என அலன் கீனன் தெரிவித்துள்ளார் என இச் செய்திக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா-11)

## படையினருக்கு...

இராணுவ வீரர்கள் விடயத்தில் நாட்டைக் குழப்பும் வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறானவர்கள் எதனை எதிர்பார்க்கின்றனர் என்று புரியவில்லை.

இதனைச் சர்வதேச சதித்திட்டம் என்று கூறுவதற்கு நான் விரும்பவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். இராணுவ வீரர்களுக்கு உரிய மரியாதையும் கௌரவமும் அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (பா)

## காணி...

மாகாண அரசுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இருக்க வேண்டியது அடிப்படைத் தேவைகளாகும்.

காணி அதிகாரம் இல்லாவிட்டால் மாகாணத்திற்குள் அபிவிருத்தி நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது. மக்களுக்கு காணிகளை பகிர்ந்தளிக்க முடியாது.

அதேபோன்று பொலிஸ் அதிகாரம் இல்லாவிட்டால் மாகாணத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட முடியாது. எனவே காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அற்ற ஒரு அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு அவசியமில்லை.

13ஆவது திருத்தச் சட்டத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இதனை அரசாங்கம் வழங்க மறுத்தால் 13ஆவது திருத்தச் சட்டத்தை புறந்தள்ளியுள்ளதாக அர்த்தம்.

இப்படியிருக்கையில், இனப்பிரச்சினை தீர்வுக்கு 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வை முன்வைக்கவுள்ளதாக அரசாங்கம் உலக நாடுகளுக்கு கூறி வருவது எவ்வாறு என சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். (பா)

## பொன்சேகாவின்...

பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு இணைய மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் இந்த மகஜருக்கு குறைந்த பட்சம் 25 ஆயிரம் கையொப்பங்கள் தேவைப் பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஒரு மாத காலத்திற்குள் 25 ஆயிரம் கையொப்பங்கள் திரட்டப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டால் அந்த மகஜர் குறித்து நடவடிக்கை எடுக்கும் என அமெரிக்கா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## கூட்டமைப்புடன்...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை அரசாங்கம் வழங்காது என தெரிந்த போதிலும் மாகாண சபைகளுக்கு இத்தகைய அதிகாரங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரி வருகிறது.

மாகாண சபைகளுக்கு இத்தகைய அதிகாரங்களை வழங்க அரசாங்கம் முன்வராது என்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது காலத்தை இழுத்தடிக்கும் செயலாகும்.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் சோனியா காந்தி வேறு மாநிலங்களுக்குச் செல்ல வேண்டுமாயின் மாநில ஆட்சியாளரிடம் அனுமதி கோர வேண்டியுள்ளது.

இத்தகையதொரு நிலையைக் கொண்டிருக்க இலங்கை மக்கள் விரும்பவில்லை எனவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (பா-11)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா திரவியம்



அராலி தெற்கை பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா திரவியம் நேற்று 22.12.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு செல்லையா (தொழிலதிபர் மலேசியா) அவர்களின் பாசமிகு மனைவியும்,

காலஞ்சென்ற திருச்செல்வம், செல்வராணி, புஸ்பராசா(இலண்டன்), தவமலர், காலஞ்சென்ற குணசிங்கம், புஸ்பராணி (பிரான்ஸ்), சுபந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு நிறைந்த தாயாரும்,

இராஜேஸ்வரி, சிவநாயகம், பற்றீசியா (கொழும்பு 13), காலஞ்சென்ற சிதம்பரநாதன், பரமசிவம்(பிரான்ஸ்), தெய்வேந்திரம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், நிக்ஷன்,லுமினா (இலண்டன்), கோகிலன்(ஜேர்மனி),சிந்து (ஆசிரியர்), நந்தலாலன், றொசான் (இலண்டன்), செனீசியஸ்(டுபாய்), பிருந்தா(பிரான்ஸ்), திவ்வியா(பிரான்ஸ்), தேனுகா(ஜேர்மனி)ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சிவநாயகம் (அளவெட்டி மேற்கு)
0779605633,
0212240364
(7014)

# பொறுப்புக்கூறும் விடயத்தை...

இலங்கையை உணரவைக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு எனவும் தமிழர்களுக்கான பிரித்தானியாவின் அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழு வலியுறுத்தியுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளை கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே தமிழர்களுக்கான பிரித்தானியரின் அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளது.

அவ்வறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்டப் போரின் பொது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கு, பொறுப்புக் கூறுவதற்குரிய சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியம் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளை இலங்கை அரசாங்கம் அடியோடு மறுத்து வந்துள்ளது.

சர்வதேச மனிதவுரிமை நியமங்களுக்கு அமைய பொறுப்புக்கூறல் விவகாரத்தைநல்லிணக்கஆணைக்குழு முழுமையாகப் பூர்த்தி செய்யுமென இலங்கை அரசாங்கம் கூறி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போருக்குப்பின்னான நிலைமைகள் மற்றும் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பான சில நேர்மறையான பரிந்துரைகளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முன்வைக்கின்றபோதும், இறுதிக்கட்ட போர்மீறல்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களுக்கான சட்ட நடவடிக்கைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு அறிக்கையில் கண்டறியப்பட்ட பலவற்றை இந்த அறிக்கை நிராகரிக்கின்றது.

பல்வேறு மனிதவுரிமை அமைப்புகளால் எதிர்பார்க்கப்பட்டது போல, இறுதிக்கட்டப் போரின் போது இடம் பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை முன்வைக்க தவறியுள்ள நல்லிணக்க ஆணைக்குழு பாதிக்கப்பட்டவர்களுக்குரிய பொறுப்புக் கூறலிலிருந்தும் தவறியுள்ளது.

மனிதவுரிமை மீறல்கள் பாரிய பிரச்சினையாக உள்ளமையை ஏற்றுக் கொள்ளும் இந்த அறிக்கை, அரச படைத்தரப்பினரின் பாரிய போர் மீறல்கள், மனிதவுரிமை மீறல்கள் மற்றும் மனிதத்திற்கு எதிரான மீறல்கள் தொடர்பான காத்திரமான ஆதாரங்களை நிராகரித்துள்ளது.

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்னெடுக்காது விடின், விசாரணைகளுக்குரிய சர்வதேச பொறிமுறை ஒன்றிற்கு ஆதரவு வழங்குவதாக பிரித்தானியா உட்பட்ட பல அரசாங்கங்கள் தெரிவித்துள்ளன.

போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் சர்வதேச நியம மீறல்களை நல்லிணக்க ஆணைக்குழு உதாசீனம் செய்துள்ளது. உள்நாட்டு நிலைமைகளை முக்கியத்துவப் படுத்தி தமது பரிந்துரைகள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக அதிக கவனம் குவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேக விசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்குரிய கடப்பாட்டினை இலங்கையை உணரவைக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு. அதன் ஊடாக போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியை வழங்குவதோடு, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய நல்லிணக்கத்திற்குரிய பாதையையும் அதனூடாக அமைத்துக் கொள்வதற்கும் சர்வதேச சமூகம் வழிகோல வேண்டும் என தமிழர்களுக்கான பிரித்தானியாவின் அனைத்தக் கட்சிநாடாளுமன்றக் குழு கோரிக்கை விடுத்துள்ளது. (பா)


**விற்பனையாகிறது**

இலங்கை திறந்த புல்கலைக்கழக சட்டமாணி தெரிவுப் பரீட்சைக்கான வழிகாட்டி - 2012

(முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்கள் விரிவான விடைகளுடன்)

விலை 150/-

ஆசிரியர் : P. உமாசங்கர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம். (5270)

**கிறிஸ்ரல் சென்ரர்**

நெல்லியடி

**English class**

பிரிவு - V

ஆரம்பம் : 27.12.2011

நேரம் : மு.ப. 9 மணி

O/L எடுத்த மாணவர்களுக்கு

By S. சடகோபன் (C-5269)

**2014 A/L**

கணித, உயிரியல் பிரிவுகள்

கணிதம் : P. விமலநாதன்

உயிரியல் : R. குகானந்தன்

பௌதிகவியல் : M. கருணாநிதி

இரசாயனவியல் : N. வாகீசன்

ஆரம்பம் : 26.12.2011 திங்கள் 9.00 AM

NEW EDUCATION WORLD

ஆனைப்பந்தி (7012)

**INFORMATION TECHNOLOGY PARK**

Jaffna, Sri Lanka.

Under the purview of the

Ministry of Technology & Research

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.

Office : 021 222 3641
Fax No : 021 222 3643

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் . கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

Special Classes

* Internet & e-mail (Workshop)
* Dip.in PC Application & Office Management

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 06-01-12

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 07-01-12

Centre for Information Technology

-Executive Officer-

**SPOKEN ENGLISH**

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**MyWay English**

182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம்
சனி : காலை 8-9, 9-10, 10-11, 11-12

இலங்கை வங்கி மேல்மாடி. சங்கானை
சனி : மாலை 2-3, 3-4, 4-5, 5-6

NSB அருகில் நெல்லியடி
ஞாயிறு : காலை 8-9, 9-10, 10-11, 11-12

ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி
ஞாயிறு : மாலை 2-3, 3-4, 4-5, 5-6

077 33 63 456

**6 இலவச புத்தகம்**

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற விரும்பும் அனைவருக்கும் MyWay இன் 6 ஆங்கில புத்தகங்கள் மற்றும் பயிற்சி வகுப்பு இலவசம். 23.12.2011 இன்று அருகிலுள்ள MyWay கிளையினை அணுகவும்

MyWay English

182, ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம்

NSB அருகில் நெல்லியடி

இலங்கை வங்கி மேல்மாடி. சங்கானை

ஸ்ரேசன் வீதி, சாவகச்சேரி

077 33 63 456

**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

2014 A/L

கணித, உயிரியல் பிரிவு

பௌதிகவியல் — திரு. S. சோதிலிங்கம், திரு. R. குமரன்

இரசாயனவியல் — திரு. K. சிவத்திரன், திரு. M. மகேஸ்வரன்

உயிரியல் — திரு. T. கெங்காதரன், திரு. T. தம்பிராசா, வழமையான ஆசிரியர்

இணைந்த கணிதம் — திரு. S. செந்தில்ராஜ், திரு. செந்தில்நாதன்

(C-5262)

ஆரம்பம் : 28.12.2011 புதன் காலை 8.30

**NEW SCIENCE COLLEGE**

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

2014 A/L

CHEMISTRY

By

Mr.S. Dias

ஆரம்பம் : 28.12.2011 Wednesday 3.00 pm

(C-5262)

**படிவம் விற்பனையாகிறது**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

பதவி வெற்றிடங்கள் -14

1. உதவிப் பணிப்பாளர் (நீதி) மற்றும் உதவிப் பணிப்பாளர் (கொள்வனவு)
2. உதவிப் பணிப்பாளர் (பொறியியல்)
3. உதவிப் பணிப்பாளர் (கட்டிடக் கலை)
4. நிர்வாக உத்தியோகத்தர்
5. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
6. திட்டமிடல் உதவியாளர்
7. திட்டமிடல் உதவியாளர் (திட்டமிடல் மற்றும் தகவல் முகாமைத்துவ முறைமை)
8. திட்டமிடல் உதவியாளர் (ஆராய்ச்சி)
9. திட்டமிடல் உதவியாளர் (புள்ளி விபரம்)
10. திட்டமிடல் உதவியாளர் (முறைமைப் பகுப்பாய்வாளர்)
11. தரவுத் தயாரிப்பு உதவியாளர்
12. சமுதாய அபிவிருத்தி உதவியாளர்

(1–12) பட்டதாரிகள்

13. செய்நிரல் எழுதுநர்கள்- G.C.E O/L & G.C.E A/L
14. முகாமைத்துவ உதவியாளர்கள் (தொழில்நுட்பம் அல்லாத) G.C.E O/L & G.C.E A/L

பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம். (C-5270)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.